26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2016


# உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு $12 பில்லியன் முதலீடு!

லிபரல் கட்சியின் கனேடிய மத்திய அரசாங்கத்திற்கான முதலாவது வரவு செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிதி மந்திரி பில் மோனோ (Bill Morneau) 2016 மார்ச் 22இல் சமர்ப்பித்தார். இதில் அடுத்த நிதி ஆண்டான 2016 - 2017இல் $29.4 பில்லியன் துண்டு விழுகிறது. அதாவது அடுத்த நிதி ஆண்டில் கனேடிய மத்திய அரசின் வருமானம் $287.7 பில்லியனாகவும் செலவீனம் $317.1 பில்லியனாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதை தொடர்ந்து வரும் நிதியாண்டுகளான 2017-2018இல் $29 பில்லியனும், 2018-2019இல் $22.8 பில்லியனும், 2019-2020இல் $17.7 பில்லியனும் வரவு செலவுத்திட்டங்களில் துண்டுவிழும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதாவது அடுத்த வரும் நான்கு வரவு செலவுத் திட்டங்களிலும் தொடர்ந்து மொத்தமாக $100 பில்லியன் துண்டுவிழுகிறது.

இவ்வரவு செலவுத்திட்டங்களின் மூலம் லிபரல் அரசாங்கம் முக்கியமாக மக்களின் அடிப்படை வசதிகளுக்கு தேவையான கட்டிடங்கள் மற்றும் போக்குவரத்து பாதைகள் உள்ளடங்கிய முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களில் பெரும்பகுதி நிதியை முதலிட உள்ளது. இதற்கு மட்டுமென அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு $12 பில்லியனையும் அடுத்துவரும் பத்து ஆண்டுகளுக்கு $120 பில்லியனையும் முதலிட திட்டமிட்டுள்ளது.






அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு முதலிட உள்ள $12 பில்லியனும் பின்வருமாறு வரவு செலவுத்திட்டத்தில் பிரிக்கப் பட்டுள்ளது. $3.4 பில்லியன் பொது போக்கு வரத்து திட்டங்களுக்கும், $1.4 பில்லியன் விலைகுறைந்த (Affordable) வீடுகள் அமைப்பதற்கும், $2.2 பில்லியன் குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புத் திட்டங்களுக்கும் (பெரும்பாலும் கனடாவின் பூர்வீக குடிமக்கள் வாழும் பிரதேசங்கள்), $0.5 பில்லியன் ஆரம்பக்கல்வி மற்றும் குழந்தைகள் பராமரிப்பு திட்டங்களுக்கும், $0.5 பில்லியன் காலநிலை மாற்றத்தை குறைப்பதற்குரிய தொழில் நுட்பத்திட்டங்களுக்கும் மீதமுள்ள $4 பில்லியன் ஏனைய பல உள்கட்டமைப்பு திட்டங்களுக்கும் முதலிடப்பட உள்ளன.

“நடுத்தர வர்க்கத்தை வளர்ப்போம்” என்ற தலைப்புடன் சமர்ப்பிக்கப்பட்ட இந்த 269 பக்கங்களை கொண்ட வரவு செலவுத் திட்டத்தில் உள்ள வேறு சில விடயங்களைப் பார்ப்போம்.

குழந்தை வளர்ப்பிற்கு வழங்கப்படும் வரிவிலக்குப் பெற்ற கனேடிய அரசின் நிதி உதவித்திட்டம் 2016 யூலை 1ஆம் திகதியில் இருந்து மாற்றப்பட்டுள்ளது. 6 வயதுக்கு உட்பட்ட குழந்தை ஒன்றிற்கு $6,400 உம் 6 வயதிற்கு மேல் 18 வயதுக்குட்பட்ட பிள்ளை ஒன்றுக்கு $5,400 உம் வழங்கப்பட உள்ளது. இது குடும்ப வருமானம் $30,000 இற்கு மேல் உள்ளவர்களுக்கு ஒரு பகுதி குறைக்கபட்டு படிப்படியாக இக்குறைப்பு அதிகரிக்கப்பட்டு $190,000 குடும்ப வருமானம் உள்ளவர்களுக்கு முற்றாக நிறுத்தப்படும். முந்தைய அரசாங்கத்தால் குழந்தைகளின் உடற்பயிற்சி செலவினங்களுக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கு 2017ஆம் ஆண்டுடன் நிறுத்தப்படும். மாணவர்களுக்கு படிப்பிக்க உதவும் சாதனங்கள் வாங்க செலவிடப்படும் தொகையில் $150 இற்கு ஆசிரியர்களுக்கு வரிவிலக்கு வழங்கப்படும்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
My 1 priority is your satisfaction!
416-712-2006
5-year variable 2.25%

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-65
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com


HOMES for Sale *Commercial*Investments
LISTING COMMISSION 999/-* !!
Harwood & Taunton
4 bm 4 wsrm home 729 k
Bayview/Elgin Mills
finished
Rossland /Harwood
695k
4 bm 4 wsrm basement finished -apartment
Scarbough
LARGER LOT 50 x 182
Bungalow House
SCARBOROUGH
$263,500
New Condo apartment
Mccowan and Kingston rd
STORE PLUS APT
389k
Investment rented for $3000
9th Line & Bur Oak
LUXURY
4 bedroom / 5 wsrm bsmnt apt
Steeles/Kennedy
4 bm 3 wsrm
Ontario north /224K
100+Ac
Vacant 100+ acre
Pharmacy/Lawrence
649K
3 bm 4 wsrm basement apartment potential 1200/- income
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
Hall of Famer
14 years of service
Century 21
80 Corporate Dr. Suite 208 Toronto
416-290 1200
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
NEW condos
VIP ACCESS
SAVE MONEY!
21 FREE services
Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-


THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out how much your home worth.
Free Market Evaluation without any Obligations
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
HomeLife/GTA Realty Inc.
Higher Standards Agents... Higher Results!


ATCHUVELY CENTRAL COLLEGE OLD STUDENT ASSOCIATION OF CANADA
அச்சாரம்
ACHCHAARAM 2016
POWERED BY
ZEN JELAN
IDEAL DEVELOPMENTS 416.754.2790
PLATINUM SPONSORS
TECDATA ENGINEERS 416.829.5054
A&T
GOLD SPONSORS
REDLINE CUSTOM WORKX INC 647.501.1984
FRIENDLY 416.291.9075
GTA VIDEO ENTERTAINMENT 416.400.1760
SELVAM 647.669.5632
APEX CREATIONS 416-297-0707
தாய் Thai
VISION 647-891-4624
APRIL 09, 2016, SAT 5.30 PM
St.Peter & Paul Banquet Hall
FOR TICKETS / DETAILS : 647.210.1370 / 416.505.7524 / 647.975.5793
Tickets : VIP-$100 / Family-$80 / Single-$25

GLORIOUSPRINTERS
www.gloriousprinters.com
Our goal is to help our clients to save more, and get more result.
Glorious.Printers1
9889 Markham Road, Unit-2, Markham, ON., L6E 0B7 T: 905.471.2500, F: 905.471.2501
printglorious@gmail.com, info@gloriousprinters.com gloriousweb.ca
• Business Cards • Flyers • Post Cards • Banners • Signs • Window Lettering
• NCR Form Invoices • Brochures • Menus • Posters • T-Shirt Printing • Mug Printing
• Photo Framing • Video • Photography • CD & DVD Covers • Car Magnets • channel letters etc.,
- and also do -
FedEx TNT DHL Purolator
Design | Wedding Cards | Printing | Photo | Video | Website

# உள்கட்டமைப்பு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மாணவர்களுக்கு வழங்கப்படும் பண உதவி 50% ஆல் அதிகரிக்கப்பட உள்ளது. இதன்மூலம் வருமானம் குறைவாக உள்ள குடும்பத்தில் உள்ள மாணவருக்கு $3,000 உம் நடுத்தர வருமானம் உள்ள குடும்பத்தில் உள்ள மாணவருக்கு $1,200 உம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை முறையே $2,000 உம் $800 உம் ஆக இருந்தன.

கனேடிய அரசு கலைகள் மற்றும் கலாசாரத்திற்கு என $1.9 பில்லியன் ஒதுக்கியுள்ளது. இதில் $675 மில்லியன் CBC இக்கு உதவிப்பணமாக வழங்கப்பட உள்ளது. வயது முதிர்ந்தவர்களுக்கு வழங்கும் மேலதிக உதவித் தொகையான GIS வயது முதிர்ந்தவர் ஒருவருக்கு $947 ஆக உயர்த்தப்படவுள்ளது. இது $4,600 வருடவருமானத்திற்கு உட்பட்டவர்களுக்கு முழுவதுமாகவும் பின்னர் அவர்களது வருமானத்திற்கு ஏற்ப ஒரு பகுதி குறைக்கப்பட்டு படிப்படியாக இக்குறைப்பு அதிகரிக்கப்பட்டு வருடவருமானம் $8,400 இற்கு மேல் உள்ளவர்களுக்கு நிறுத்தப்படும், இவ் உதவி வாழ்க்கைச்செலவுக்கு ஏற்ப அதிகரிக்கப்படும்.

கனேடிய முன்னாள் படைவீர்களுக்கு சேவை செய்துவந்த அரசஅலுவலங்களில் 9 அலுவலங்கள் முந்திய அரசால் மூடப்பட்டன. இவற்றை மீண்டும் திறக்க இந்த அரசு இவ்வரவு செலவுத்திட்டத்தில் உறுதி அளித்துள்ளது.



இவ்வரவு செலவுத்திட்டத்தின் துண்டுவிழும் தொகையுடன் கனேடிய மத்திய அரசின் கடன் பளு $619.3 பில்லியனில் இருந்து $648.7 பில்லியனிற்கு அதிகரித்துள்ளது. இவ்வாறே அடுத்துவரும் மூன்று நிதியாண்டுகளிலும் துண்டுவிழும் வரவுசெலவுத்திட்டமே வரவுள்ளதால் 2019-2020 இல் கனேடிய அரசின் கடன்பளு $718.2 பில்லியனாக அதிகரித்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு கனேடிய அரசின் கடன்பளு அதிகரித்தாலும் கனடாவின் கடன் தொகைக்கும் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான தொடர்பு மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே உள்ளது என கனேடிய பிரதமர் தெரிவிக்கிறார். பொதுவாக பொருளாதார வல்லுனர்களின் கருத்துப்படி ஒரு நாட்டின் கடன் தொகைக்கும் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான தொடர்பின் வீதம் குறைவாக இருந்தால் அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது. அந்நாட்டின் கடன் தொகை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று அர்த்தம். அனைத்துலக நாணய நிதியத்தின் (IMF) தகவல்களின்படி சில நாடுகளின் கடன்தொகைக்கும் அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான தொடர்பின் வீதம் 2014 இல் பின்வருமாறு இருந்தன.

| | |
|---|---|
| கனடா - 37.3% | ஜேர்மனி - 57.2% |
| ஐக்கிய இராச்சியம் - 82.7% | பிரான்ஸ் - 84.0% |
| அமெரிக்கா - 87.8% | ஜப்பான் - 134.3% |

கனேடிய நிதி அமைச்சின் தகவல்களின்படி 2019-2020

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
நீங்கள் இலவச பயிற்சிகள் பெறலாம்!

எங்கள் மாணவர்கள் பயிற்சி ஆரம்பித்து ஒரு வருடத்திற்குள் ஆறு இலக்க ஊதியம் பெற்றனர். சிலர் USA இல் Google மற்றும் eBay இல் வேலை செய்கிறார்கள்
தகுதிபெற்றால் வாழ்க்கை செலவுடன் கூடிய டிப்ளோமா பட்டப்படிப்புகள்.
POST GRADUATE DIPLOMAS & DIPLOMAS
DIPLOMAS IN I.T.
• Systems Administrator( Linux and Unix )
• Network (LAN/WAN) Administrator
• IT Support with Software QA
• Cisco & Red Hat Engineer
BUSINESS DIPLOMAS
• Business Administration
• Computerized Accounting with Office Administration.
• Post Graduate Diploma in Supply Chain & Logistics Management
• Computerized Accounting with Office Administration - SAP
POST GRADUATE DIPLOMAS IN I.T.
• Enterprise Linux Administration
• Enterprise IT Management
416-850-1456/416-489-8946
Progress & Bellamy
email:learn@thecanadiancollege.ca www.thecanadiancollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005. Designated Learning Institution (DLI #: 019283878482)

# அதிமுகவுக்கு நாங்கள்தான் போட்டி! சீமான்

## தமிழ்நாடு அரசியல்

கூட்டணி, பேச்சுவார்த்தை, தொகுதிப் பங்கீடு என தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் பரபரப்பாக இருக்க, 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களையும் தேர்தல் அறிக்கையை யும் வெளியிட்டுவிட்டு, தனது ஆவேசமான பிரசாரத்தைத் தொடங்கி விட்டார், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான். தமிழகம் முழுக்க சுற்றும் சூறாவளிப் பிரச்சார திட்டத்தின் இடையே சென்னை திரும்பிய வரை ஒரு மாலையில் சந்தித்தோம்.

திமுக, அதிமுக, தேமுதிக, மக்கள் நலக் கூட்டணி கட்சிகளோடு ஒப்பிடுகையில் உங்கள் கட்சி மிகவும் சிறியது, புதியது இந்நிலையில் எந்த நம்பிக்கையில் 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுகிறீர்கள்?

நாம் தமிழர் கட்சி சிறு கட்சின்னு நீங்க எப்படி சொல்றீங்க? மதிமுக, பாமக, கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளில் எதாவது ஒன்று 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறதா? இல்லை, அதற்கான துணிவு எந்தக் கட்சிக்காவது இருக்கிறதா? ஆனால், நாங்கள் 234 தொகுதிகளிலும் நிற்கிறோம். அப்படியென்றால் நாங்கள் சிறு கட்சி என்று எப்படி சொல்ல முடியும்? கட்சி தொடங்கிய காலந்தொட்டே ஊடகங்கள் எங்களுக்கு துணை நின்றிருந்தால் தமிழக அரசியலில் பெரும் புரட்சியே ஏற்பட்டிருக் கும். நானும் நாம் தமிழர் கட்சியும் திட்ட மிட்டே மறைக்கப்பட்டு வந்திருக்கிறோம். இனி மறைக்க முடியாது.

என்ன சொல்லி மக்களிடம் ஓட்டு கேட்பீர்கள்?

ஆட்சி மாற்றத்தால் பயன் இல்லை. அடிப்படை அரசியல் மாற்றம்தான் தேவை. தமிழன் தன் தன்மானத்தால்தான் இந்த அரசியலைத் தொடங்குகிறான். தன் மொழியில்தான் எழுச்சியுற்றான். இந்த இரண்டுமே இப்போது இல்லை. மொழிப்போர் புரட்சியால்தான் திமுக ஆட்சியைக் கைப் பற்றியது. மொழி இருக்கும்வரை தமிழன் உயிர்ப்போடு இருப்பான் என்பதால் அந்த மொழியைத் திட்டமிட்டு அழித்தது. அதனால், ‘எங்கள் திருநாட்டில் எங்கள் நல் ஆட்சி’, ‘தலைநகரை மாற்றுவோம் தமிழக த்தை மாற்றுவோம்’ என்கிற முழக்கத்தை முன் வைத்து மக்களைச் சந்திக்கிறோம். பணம் இருக்கிறவன்தான் அரசியல் செய்ய முடியும் என்பதை ஒழித்துக்கட்டி, தீய ஆட்சி முறையை தூய ஆட்சி முறையாக மாற்றுவோம்.

நாம் தமிழர் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்தால் என்ன செய்வீர்கள்?

அதிமுகவும் திமுகவும் தமிழர்களை இலவசத்துக்காக கையேந்தும் நிலைக்கு தள்ளிவிட்டனர். நாம் தமிழர் ஆட்சியில் இலவச திட்டங்கள் நிறுத்தப்படும். விவசாயம் தமிழக அரசின் பணியாக



மாற்றப்படும். இரசாயன உரங்கள் இல்லா மல் இயற்கை மேலாண்மை மேற்கொள்ளப் படும். பனை பொருள் உற்பத்தி சார்ந்த வேலைவாய்ப்பு பெருக்கப்படும். தொழில் சார்ந்த ஒருங்கிணைந்த பண்ணைகள் உருவாக்கப்படும்.

சென்னை தலைநகராக இருப்பதால் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு அனைத்துமே ஒரே இடத்தில்தான் குவிந்திருக்கிறது. இதனால் அனைத்து மக்களும் சென்னையை நோக்கியே வருகிறார்கள். இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை கருத்தில் கொண்டு தமிழக தலைநகரை சென்னை, திருச்சி, கோவை, மதுரை, கன்னியாகுமரி என 5 ஆக பிரிக்கப்படும். செயலாண்மை வசதிக்கான தலைநகராக திருச்சி இருக்கும். சென்னையானது திரைக்கலை, துறைமுகம், கணினி நுட்பத் தலைநகராக இருக்கும். தொழில், வர்த்தகத் தலைநகராக கோவை விளங்கும். மொழி, கலை, பண்பாட்டுக்கான தலைநகராக மதுரையும் தமிழர் மெய்யியலுக்கான தலைநகராக கன்னியாகுமரியும் இருக்கும்.

இவை மட்டுமல்லாமல், நாங்கள் என்னென்ன செய்வோம் என்பதை எங்கள் தேர்தல் அறிக்கையில் தெளிவாக குறிப்பிட்டுள் ளோம். நீங்கள் சொல்லும் அதிமுக, திமுக, மக்கள் நலக் கூட்டணி எதுவும் இதுவரை தங்கள் தேர்தல் அறிக்கையையே வெளி யிடவில்லை. என்ன செய்யப்போகிறோம் எனச் சொல்லவும் இல்லை.

**தொடர்ச்சி 12ஆம் பக்கம்...**



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா?

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
அனைத்து கடன்களையும் ஒன்றாக்க



MORTGAGE IN ANY SITUATION

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011




## வோக் இன் - 9.00 am- 5.00 pm

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

5 Yrs Fixed Rate : 2.49 %
5 Yrs Variable : CALL US
*OAC

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

# கனடாவின் # 1 மோட்கேஜ் நிறுவனம்

# ஊடகத்துறை அமைச்சரின் வடக்கு வருகை!

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர், வட பகுதிக்கு தென்னிலங்கையிலிருந்து பல அமைச்சர்கள், அரசியல்வாதிகள் அடிக்கடி விஜயம் செய்கின்றனர். அந்த வகையில், அண்மையில் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்கவும் வடக்கிற்கு பயணம் செய்துள்ளார். ஆனால், அவரது வருகை பலரது கவனத்தையும் அதிகம் ஈர்த்த ஒன்றாக அமைந்துள்ளது.

நீண்ட காலத்திற்கு பின்னர் ஓர் ஊடக அமைச்சர் வட மாகாணத்திற்கு செய்த விஜயமாகவே இது பார்க்கப்படு கின்றது. அவரது வருகை நல்லிணத்திற்கானது என்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த நூறு வரையான ஊடகவியலாளர் குழுவுடன் ரயிலில் அவர் வருகை தந்ததும் கவனயீர்ப்பான விடயமாக அமைந்தது.

கடந்த 27ஆம் திகதி கொழும்பிலிருந்து ஆரம்பித்த அவரது பயணத்தில் தென்னிலங்கை ஊடகவியலாளர்களும் இணைந்து கொண்டனர். முக்கியமான ரயில் நிலையங்களில் அந்தந்த பகுதி ஊடகவியலாளர்களால் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. குறிப்பாக குருநாகல், அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதான ரயில் நிலையங்களில் அவருக்கு ஊடகவியலாளர்கள், பொதுமக்களால் வரவேற்பளிக்கப்பட்டது. யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் அவர் வரவேற்கப்பட்டதுடன் அங்கு பல நிகழ்வுகளில் அமைச்சர் தொடர்ச்சியாக கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் வடமாகாண ஆளுநர், முப்படைத் தளபதிகள் சமயத் தலைவர்கள், மற்றும் ஊடகவியலாளர் களை சந்தித்து அவர் கலந்துரையாடினார் முதலமைச்சரை தனியாக அவரது அலுவலகத்தில் சந்திப்பதற்கு முயன்ற போதும் அவரை சந்திக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை அலுவலகங்களுக்கும் அவர் பயணம் செய்தார். யாழ். பொது நூலகத்திற்கு சென்றார். வடக்கில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களை சந்திக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. அவர்களுக்கு அந்த நிகழ்வில் உதவிகள் வழங்கும் திட்டமும் அறிவிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக, நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினார்.

26ஆம் திகதியிலிருந்து 28ஆம் திகதி வரை மூன்று நாட்கள் இவ்வாறு பல்வேறு நிகழ்வுகளில் அமைச்சர் கலந்து கொண்டிருந்தார். இதன்போது, வடக்கு ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் தங்கள் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

வடக்கில் கடந்த காலத்தில் ஊடகப் பணியின்போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் தொடர்பில் இதுவரையில் நீதியான விசாரணைகள் நடத்தப்படவில்லை. இந்நிலையில், இந்தப் படுகொலைகள் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க அமைச்சர் பணிப்புரை விடுக்க வேண்டும்.

வடக்கில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் தாக்கப்பட்டனர், கடத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர். அதனைப் போன்று ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு, எரியூட்டப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

சர்வதேச ஊடக வரலாற்றில் முதன் முறையாக ஊடக நிறுவனத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்று பத்து ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. 2006ஆம் ஆண்டு சர்வதேச ஊடக சுதந்திர தினத்திற்கு முதல் நாள், உதயன் பத்திரிகை வளாகத்தினுள் பிரவேசித்த ஆயுததாரிகள், நிறுவனத்தில் பணி புரிந்து கொண்டிருந்த இரண்டு ஊடகப் பணியாளர்களைச் சுட்டுக் கொலை செய்ததுடன் நிறுவனத்திற்குள் கண்மூடித்தனமாக தாக்குதலும் நடத்தியிருந்தனர்.



இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இதேபோன்று, 2000ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன், 2006ஆம் ஆண்டு திருகோணமலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பிராந்திய செய்தியாளர் சுகிர்தராஜன், யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட செய்தியா-ளர் ரஜிவர்மன், யாழ். கொக்குவிலில் வீட்டில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவன் நிலக்சன், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் வி.நிமலராஜ் ஆகியோர் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவில்லை.

உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகம், அப்பத்திரிகையின் தலைமை அலுவலகம் என்பவற்றின் மீதான தாக்குதல், அப்பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல், அப்பத்திரிகை விநியோக ஊழியர்கள் மீதான தாக்குதல் என்று எந்தவொரு சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவில்லை. எனவே, வடக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல சம்பவங்களும் பட்டியல்படுத்தப்பட்டு, உரிய விசாரணைகள் நீதியாக மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படு வதற்குரிய ஏற்பாடுகளை ஊடகத்துறை அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பின்னர், வடக்கின் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர், இலங்கையில் முன்னைய அரசாங்க காலத்தைப் போன்று ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல், கடத்தல்கள், கொலைகள் போன்ற சம்பவங்கள் இனியும் நடக்காது என்று உறுதியளித்தார். ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, வெள்ளை வான்களில் கடத்தப்பட்டமை, அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் இப்போது இடம்பெறுவதில்லை. ஊடக சுதந்திரத்தை நாங்கள் உறுதி செய்திருக்கின்றோம் என்றார். எதிர்காலத்திலும் ஊடகவியலாளர்கள் அச்சமின்றி செயற்படத்தக்க வகையில் எமது ஆட்சி நிர்வாகம் நடக்கும் என்றும் கூறினார்.

ஊடகவியலாளர்களின் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படும். அதில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இருக்க மாட்டாது என்றும் குறிப்பிட்டார். மாவட்டம் தோறும் ஊடகவியலாளர் களுக்கு 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் உறுதியளித்திருக்கின்றார்.

கடந்த ஆட்சியின் போது அதிகம் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்களில் ஊடகவியலாளர்கள் முதன்மையானவர் கள். வடக்கு கிழக்கில் மட்டுமல்லாது, தென்னிலங்கையிலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள், காணாமலாக்கப்பட்டார்கள். ஊடகவியலாளர்களை கடத்து வதற்காகவே வெள்ளை வான்கள் சுற்றித் திரிந்தன. வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் அதிகளவிலான பாதிப்பிற்குள்ளாகினர். யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் குறையவில்லை.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மிக மோசமான, கேவலமான வகையில் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டதை யாரும் மறக்க முடியாது. கொழும்பு உட்பட தென்னிலங்கையில் இடம்பெறும் ஊடக கருத்தரங்குகளில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டு, தமிழ் ஊடகவியலாளர்கள் அங்கு செல்லும் போது அக்கருத்தரங்குகளில் குழப்பங்களை செய்வதற்கென சில குழுக்கள் இயங்கின.

அங்கு தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அவ்வேளை களில், பொலிஸாருக்கு அறிவித்தாலும் அவர்கள் அவ்விடத் திற்கு உடனடியாக வருவதில்லை. திட்டமிட்டே இவ்வாறான குழப்பங்கள் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக ஏவி விடப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் இவை இடம்பெறுவதில்லை.

## - விகிர்தன் -

இந்த நிலையில் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் நிலைமை சற்று சீராகியுள்ளதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும். முன்னைய அச்சுறுத்தல்கள் தற்போது குறைந்துள் ளன. ஆனால் அது முற்றாக இல்லாமலாகி விட்டதென்றும் கூற முடியாது. தமிழ் பகுதிகளில் ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்புகள், மிரட்டல்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. என்ற போதிலும், மாற்றம் ஒன்றை உணர முடிகின்றது. இந்த மாற்றத்தின் தொடர்ச்சி யாக முழுமையான ஊடக சுதந்திரம் ஏற்பட வேண்டும். நாடு முழுவதும் அது ஏற்பட வேண்டும். இவ்வாறான எதிர்பார்ப்பிலும் நம்பிக்கையிலுமே ஊடக அமைச்சரின் வடக்கு விஜயத்தின் போது அவருக்கு ஊடகவியலாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பளித்தனர். இவ்வாறு முன்னர் எப்போதும் ஒரு ஊடக அமைச்சருக்கு வரவேற்பளிக்கப் படவில்லை என்று கூறினால் அது மிகையாகாது.

வடக்கில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் அளிப்பதுடன் கடமை முடிந்ததாக இருக்கக் கூடாது. அவர்களின் கொலைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் உள்ளது. இந்த விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் போதே ஊடகத்துறை அமைச்சரின் நல்லிணக்கத்திற்கான இந்தப் பயணத்தின் நோக்கம் முழுமை பெறும்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

கடந்த மூன்று இதழ்களில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து 20, 2017 வரை)

இவற்றில் முதல் மூன்று பிரிவுகளான Pre Nomination Phase, National Coventions Phase மற்றும் General Election Phase பற்றி விபரமாகப் பார்த் தோம். இவ் இதழில் நான்காவது பிரிவான Elctoral College Phase ஐப் பார்ப்போம்.

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Berni Sanders உம் ஆவர். குடியரசுக் கட்சியின் வேட்பாளர்களில் மேலும் ஒருவர் விலகிய பின்னர் இப்போது குடியரசுக் கட்சியின் சார்பில் மூவர் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் Ted Cruz, John Kasich மற்றும் Donald Trump ஆவர்.

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர ஜனநாயகக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மார்ச் 31 வரை நடைபெற்ற 34 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Hilary Clinton 1,243 பிரதிநிதிகளையும் Bernie Sanders 975 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக்கட்சிக்கான அடுத்த தேர்தல் ஏப்பிரல் 05இல் விஸ்கான்கின் மாநிலத்தில் நடைபெற உள்ளது. ஜனநாயகக்கட்சியின் தேசியமாநாடு 2016 யூலை 25 இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

2016 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர குடியரசுக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மார்ச் 31 வரை நடைபெற்ற 34 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Donald Trump 739, Ted Cruz 465 மற்றும் John Kasich 143 பிரதிநிதிகளை பெற்றுள்ளார்கள். குடியரசுக்கட்சிக்கான அடுத்த தேர்தல் ஏப்பிரல் 03இல் North Dakotaஇல் நடைபெற உள்ளது. குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18 இல் Cleveland, Ohio இல் நடைபெறஉள்ளது.



## 4. Elctoral College Phase:

அமெரிக்க அரசியல் சாசனப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து நொவம்பர் 08, 2016இல் தெரிவு செய்யப்படும் “தெரிவாளர்கள்” அந்தந்த மாநிலத்திற் குரிய நாடாளுமன்றத்தில் உள்ள சட்டசபையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற ஆண்டு மார்கழி மாதத்தில் வரும் முதல் திங்கட்கிழமைக்கு பின்னர் வரும் இரண்டாவது புதன்கிழமை கூட வேண்டும். அங்கு அவர்கள் ஜனாதிபதி, உப ஜனாதிபதியை வாக்களிப்பு மூலம் தெரிவு செய்வார்கள். அவர்களின் வாக்குகள் எண்ணப்பட்டு பதிவு செய்யப்பட்டு அம்மாநில ஆளுனரால் (Governor) உறுதி செய்யப்பட்டு அப்போது உள்ள அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை (Senate) தலைவருக்கு அனுப்பப்படும். (Senate சபை தலைவராக இருப்பவர் அமெரிக்க உபஜனாதிபதி ஆகும்.)

இவ்வாறு எல்லா மாநிலங்கள் மற்றும் District of Columbia இலும் இருந்து வந்த ‘தெரிவாளர்களது’ தெரிவு அமெரிக்க நாடாளுமன்ற இருசபைகளும் சேர்ந்த கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற ஆண்டிற்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி (அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால் 7ஆம் திகதி) மேற்சபை (Senate) தலைவர் தலைமை வகிக்க எண்ணப்படும்.

இந்த கூட்டத்தில் மேற்சபை தலைவரால் ‘தெரிவாளர்’களிடம் இருந்து அதிக வாக்குகளை பெற்றவர் ஜனாதிபதியாக



உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

என்ன யோசிக்கிறீர்களா? எவ்வாறு தெரிவு செய்யப்பட ‘தெரிவாளர்கள்’களது வாக்குகள் எண்ணப்பட முன்னர் (அதாவது 2017 ஜனவரி 6இற்கு முன்னர்) ஊடகங்கள் ஜனாதிபதியின் வெற்றியை கூறுகின்றன? மாநிலங்களில் தெரிவு செய்யப்பட்ட “தெரிவாளர்கள்’ தங்களை தெரிவு செய்த கட்சி வேட்பாளரை விட்டு விட்டு மற்றைய கட்சி வேட்பாளர் களுக்கு வாக்களிக்க மாட்டார்களா?

நியாயமான கேள்விகள்தான்! இவ்வாறும் நடைபெற்றுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சரித்திரத்தில் இதுவரை ஏழு ‘தெரிவாளர்கள்’ தாங்கள் தெரிவு செய்யப் பட்ட கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு அளிக் காமல் மற்றைய கட்சி வேட்பாளருக்கு வாக்கு அளித்திருக்கிறார்கள். (மிக அண்மையில் 1988இல் இது நடந்தது) அமெரிக்க அரசியல் சட்டப்படி ‘தெரிவாளர்கள்’ தாங்கள் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களிக்கலாம். இவ்வாறு ஏழுதரம் நடந்தாலும் அது ஊடகங்களால் நவம்பர் மாதத்தில் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக் கப்பட்ட ஜனாதிபதியில் மாற்றத்தை ஏற்படுத்தப் போதியதாக இருக்கவில்லை.

மேற்சபை தலைவரால் உத்தியோகபூர்வ மாக அறிவிக்கப்பட்ட ஜனாதிபதி தனது பதவியை ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற ஆண்டிற்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி (அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தாலும்) தொடங்குகி றார். (Inauguration Day) இத்துடன் நீண்டசிக்கலான அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவடைகிறது.


அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறையில் இன்னும் பல சிக்கலான விதி முறைகள் உள்ளன. ஆனால் நாங்கள் வாசகர் களுக்கு விளங்கக்கூடிய இலகுவான முறையையே மேலே விபரித்துள்ளோம். உதாரணமாக ஒரு வேட்பாளர் தேர்தல் காலத்தில் இறந்து விட்டால் அல்லது வாக்குகள் எண்ணிக்கை இருவருக்கும் சரி சமமாக வந்தால் என்ன என்ன செய்ய வேண்டும் என பலவிதி முறைகள் அமெரிக்க சட்டத்தில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

### ஏன் நவம்பர் 08இல் தேர்தல்?

இனி உங்களிடம் ஒரு கேள்வி கேட்போம். 200 ஆண்டுகள் பின்னோக்கி செல்லுங்கள். அக்காலத்திலுள்ள அரசியல் சட்ட வல்லுனர்கள் ஏன் ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதத்திலும் வரும் முதலாவது திங்கட்கிழமைக்கு பிறகு வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற வேண்டும் என்று நியமித்தார்கள் என்று கூறுங்கள் பார்க்கலாம். அக்காலத்தில் இந்த பரந்த அமெரிக்க தேசத்தில் 4 மில்லியன் மக்கள் மட்டுமே நாடு முழுவதும் சிதறி இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயி களாவர். அக்கால வழமைப்படி விவசாயி கள் எல்லாரும் தங்களது அறுவடை முடிவுற்று வீட்டில் ஓய்வு எடுக்கும் மாதமாக நவம்பர் இருப்பதே இதற்குரிய முக்கிய காரணமாகும்.

அப்போது ஏன் செவ்வாய்க்கிழமை வாக்களிப்பு நாளாக தெரிவு செய்யப்பட்டது? இப்போது போல் பிரயாணங்களுக்கு கார், பஸ் வசதியற்ற காலம் அது. குதிரை வண்டியில் சிலவேளைகளில் ஒரு நாள் முழுவதும் பிரயாணம் செய்து வாக்களிக்க செல்லவேண்டும். இவ்வாறு பிரயாணம் செய்வதற்காக திங்கட்கிழமை ஒதுக்கப்பட்டது. அக்காலத்தில் ஞாயிற்றுக்கிழமை ஒரு கட்டாய ஓய்வு நாள். பிரயாணங்கள் செய்தல் கூடாது. இதுவே நவம்பர் மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமை தேர்தலுக்காக தெரிவு செய்யப்பட்ட காரணமாகும்.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca






LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# சர்ச்சையில் சிக்கியுள்ள வீடமைப்புத் திட்டம்




- ஆதித்தன் -

போரின் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் முக்கியமான ஒன்றாக வீடமைப்பு உள்ளது. வடக்கு கிழக்கில் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட வேண்டியிருக்கின்றது. போர் முடிவுற்று ஏழு வருடங்களாகியும் இப்பணி இன்னமும் நிறைவடையவில்லை.

இறுதிக் கட்டப் போரின் போது அழிவடைந்த வன்னிப் பிரதேசங்களில் கூட முழுமையாக வீடுகள் அமைத்து முடிக்கப்படவில்லை. யாழ்.குடாநாட்டில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகள் தற்போது கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றன. அக்காணிகளில் மக்கள் சென்று குடியிருக்க வேண்டுமானால் முதலில் அங்கு வீடுகள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறாக வீடுகளின் தேவை அவசரமானதாக இருக்கின்ற போது, நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் தற்போது அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொருத்து வீடுகள் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டிற்கு அமைவாக இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அத்துடன் காலநிலைக்கும் பொருத்தமானதாக அவ்வீடுகள் அமையாது என்று கூறப்படுகின்றது. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 21 இலட்ச ரூபா செலவில் கட்டப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரையும் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் கூடுதல் செலவில் அமைக்கப்படும் வீடுகளாக இவை அமைக்கின்றன. இருப்பினும் இவை பொருத்தமற்ற வீடுகளாக இருப்பது விசனத்திற்குரியதாகும். இந்த வீடுகள் பொருத்தமற்றது என்பதை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றார்.

கடந்த மார்ச் மாதம் 12ம் திகதி காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியையும், 750 ஏக்கர் காணிகளையும் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற போது, குறித்த வீடுகள் யாழ்ப்பாணத்தின் சூழல், கலாசாரம் மற்றும் காலநிலைக்கு பொருத்தமானதாக இல்லை என்று முதலமைச்சர் குற்றம்சாட்டினார்.

முதலமைச்சரின் இந்த குற்றச்சாட்டை அதே நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் மறுத்தார். வெளியில் வெப்பம் அதிகமாக இருக்கும் போது உள்ளே வெப்பம் மிக குறைவாக இருக்கும் வகையில் அந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன என்றும்,



மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இவ்வாறான நவீனத்துவங்களை பின்பற்றியே வீடுகளை அமைக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார். இவர்களின் விவாதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடித்து வைக்கும் நிலை ஏற்பட்டது.

விக்னேஸ்வரனோ, சுவாமிநாதனோ இந்த வீடுகளில் வாழப் போவதில்லை. மக்களே வாழப் போகின்றார்கள். எனவே, மக்களின் கருத்துக்களை பெற்று இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கூறினார். எனினும், இந்த விவாதம் பின்னரும் தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. வட மாகாண முதலமைச்சர் தொடர்ந்தும் இவ்வீட்டுத் திட்டம் பொருத்தமற்றது என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தி வருகின்றார். வட மாகாணசபை அமர்வுகளிலும் இது குறித்த விவாதங்கள் நடைபெறுகின்றன.

கடந்த 24ம் திகதி வட மாகாண சபையின் மாதாந்த அமர்வின் போது, வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் வீட்டுத் திட்டத்தை வடமாகாண சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதுவரையில் அந்த வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோருகின்ற அவசர பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணை தொடர்பாகவும் சபையில் விவாதிக்கப்பட்டது. வடக்கில் அமைக்கப்படும் குறித்த வீட்டுத்திட்டம் பொருத்தமானதாக இல்லாவிடில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் அதனை ஜனாதிபதியிடம் எடுத்து விளக்கி நடவடிக்கை எடுக்க முடியாதா என்கிற கேள்வியை வட மாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டார். இது நியாயமானதொரு கேள்வியே. ஏனெனில், வடக்கு மக்களுக்காக மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டம் என்றாலும் சரி, ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் என்றாலும் சரி, அவை தொடர்பில் வட மாகாண சபை நிர்வாகத்திற்கு மட்டும்தான் அக்கறை - பொறுப்பு இருக்க வேண்டுமென்பதில்லை. இந்த பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது.

எதிர்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு பதிலளித்த அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்வோம் என்றார். இப்போது இது குறித்து, இரா.சம்பந்தன் அரசாங்கத்திடம் பேச்சு நடத்துவதாகவும் அறிய முடிகின்றது.

இவ்வாறான விவாதங்களைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். வடக்கு, கிழக்கில் மக்களுக்கு அதிகவீடுகள் தேவைப்படும் நிலையில் மீள்குடியேற்ற அமைச்சு அமைக்கும் வீடுகள் காலநிலை, வாழ்க்கைமுறைக்குப் பொருந்துமா எனப் பார்க்க வேண்டும். வடக்கு, கிழக்கில் வீட்டுத் திட்டத்தை சாட்டாகப் பயன்படுத்தி ஊழலிலும் ஒழுங்கீனமான செயலிலும் ஈடுபட எவரையும் ஈடுபட அனுமதிக்க மாட்டோம் என அவர் கூறியுள்ளார்.

வீட்டுத் திட்டம் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சு கேள்வி அறிவித்தல் கோர முன்னமே வீடுகளை அமைக்கும் நிறுவனத்தின் பெயர் கடந்த வருடத்தின் ஜூலை மாதத்திலேயே கூறப்பட்டு விட்டது. பின்னர் கண்துடைப்பாகவே கேள்வி கோரப்பட்டது. இதை எதிர்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதனை பிரதமரின் கவனத்திற்கும் கொண்டு வந்தது. இதன்பின், மீள்பரிசீலனையும் செய்யப்பட்டது. ஆனால், குறித்த வீட்டுத்திட்டம் எமது பிரதேசத்தின் காலநிலை மற்றும் வாழ்க்கைமுறைக்குப் பொருந்துமா எனப் பல கேள்விகள் இப்போது எழுந்துள்ளன.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகளவிலான வீடுகள் தேவைப்படுகின்றன. இந்த வீட்டுத்திட்டம் பல ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்கும். மேலும் இந்த வீட்டுத்



திட்டத்திற்கு பயனாளிகள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பன போன்ற பல விடயங்களில் சிக்கல்கள் இருக்கின்றன.

எங்களுடைய மக்களுக்கு வீடுகள் நிச்சயமாக, அவசியமான தேவை என்பதை காரணமாக வைத்துக்கொண்டு எங்கள் மக்களுடைய பெயரில் யாரும் ஒழுங்கீனமாக நடக்கவோ அல்லது ஊழல் செய்யவோ இடமளிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். வடக்கிலோ, கிழக்கிலோ, ஒரு வீட்டுத்திட்டம் அமைக்கப்படும்போதோ அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதோ, அம் மாகாணங்களின் நிர்வாகத்திடம் அரசாங்கம் கலந்தாலோசிக்க வேண்டும். அதிலுள்ள சாதக, பாதகங்களை அம் மக்களின் பிரதிநிதிகளாக உள்ளவர்களிடம் கேட்டறிந்து செயற்பட வேண்டும். அவ்வாறு நடைபெறும் போது, இவ்வாறான சிக்கல்கள் சர்ச்சைகள் ஏற்படுவதை தவிர்க்கலாம். இதில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சிரத்தையெடுத்து செயற்பட வேண்டும்.

அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினால், மாகாணசபை நிர்வாகங்கள் தங்கள் ஆட்சேபங்களை முன் கூட்டியே தெரிவித்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி சர்ச்சைகளும் விவாதங்களும் தொடருமானால் மக்களுக்கு அவசியமான வீடமைக்கும் பணிகள் மேலும் இழுபட்டு தாமதமாகும் நிலையே ஏற்படும். இதனால் மக்களுக்கே பாதிப்பு. இதனை மத்திய அரசாங்கம், மாகாண நிர்வாகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் மீள்குடியேற்ற அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போது, மாதிரிக்காக இரண்டு வீடுகள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுத்து பொருத்தமான வீடுகளை அமைக்கும் பணியை தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய உதவியிலான வீடொன்றை நிர்மாணிப்பதற்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றமை குறித்தும் சர்ச்சைகள் தோன்றியுள்ளன. 2009-ம் ஆண்டு மே ம ற


தொடர்ச்சி 16ஆம் பக்கம்

விளம்பரம்™
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


$344,900
3 Bedrooms, 3 W Room
pen Concept Floor Plan, Main Floor
Laundry With Garage Access
$359,900
4 Bedrooms, 3 W Room
Main Floor Laundry W/ Garage Access,
Open Living Room/Dining Room
$419,500
3+0 Bedrooms, 2 W Room
3 Car Garage, No Businesses
Or Out Buildings
$419,900
3 Bedrooms, 1 W Room
Custom Deck Overlooking Backyard
With Custom Landscaping
$419,900
3 Bedrooms, 3 W Room
Oak Staircase,S/S Applns,
Gas Stove,Jet Tub In Ensuite
$619,000
4 Bedrooms, 4 W Room
Beautiful Detached Home
W/ Finished Bsmt
$638,800
4 Bedrooms, 4 W Room
Walk In Closet With
Soaker Tub + Shower
$699,888
4 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement,
Newer Garage Door
$735,000
3+2 Bedrooms, 4 W Room
New Paint,Open Concept
Living & Diningroom
$739,917
3 Bedrooms, 3 W Room
Hardwood Flooring,Main Floor
Den,Laundry With Garage Access
$769,900
4+3 Bedrooms, 5 W Room
Professionally Finished
Basement Apartment
$849,000
4+1 Bedrooms, 3 W Room
4 Spacious Bedrooms With
Large Master Ensuite
$923,900
3 Bedrooms, 3 W Room
Wrought Iron Fencing Around
Pool, Extensive Decking,Hot Tub
$1,100,000
4+3 Bedrooms, 5 W Room
Escape To The Way The
Cottage Used To Be
$5,499,000
5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings, Theater
Room Projector & Movie Chairs
KZG 647-200-5833
Sell your home
faster
and more
money
RE/MAX
Platinum
Club
Award
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Your Home Sold In 30 Days or We buy it
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads
every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# ஜெயலலிதாவின் ஐந்தாண்டு ஆட்சி - ஒரு மதிப்பீடு

**பத்ரி சேஷாத்ரி**
பதிப்பாளர்

இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் நான் சென்று வந்திருக்கிறேன். பொதுவான பார்வையில், பிற எந்த மாநிலத்தையும் விட தமிழகம் சிறப்பான நிலையில்தான் இருக்கிறது. பரவலான நகரமயமாக்கம், கல்வியிலும் தொழில்களிலும் உள்ள வளர்ச்சி, மாநில தனிநபர் மொத்த உற்பத்தி, அதிகாரப் பரவலாக்கம், சாலைகள், போக்குவரத்து வசதி, பொது விநியோகக் கட்டமைப்பு, மருத்துவ வசதி என்று சொல்லிக்கொண்டே போகலாம். கடந்த 50 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் இந்த வளர்ச்சியில் கட்டாயம் பங்குண்டு. இந்த வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த காங்கிரஸ் ஆட்சியின் கடைசி ஆண்டுகளும் இதற்கு ஒரு காரணம்.

உலகமயமாக்கல் கொடுத்த வாய்ப்பைப் பிற இந்திய மாநிலங்களைவிடத் தமிழகம் ஆரத்தழுவி ஏற்றுக்கொண்டது நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. தனியார் பொறியியல் கல்லூரிகளின் வளர்ச்சி காரணமாக நிறைய ஐடி பொறியாளர்கள் உருவாகினர். டிசிஎஸ், இன்ஃபோசிஸ் போன்ற பெரும் ஐடி நிறுவனங்கள் தமிழகத்தையும் தமிழ்ப் பொறியாளர்களையும் நம்பின. நான்கு சக்கர வாகன உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. இதனால், பல உபதொழில்கள் தமிழகத்தில் உருவாயின. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கல்லூரிக்குச் செல்வோர் விகிதம் அதிகமாக இருக்கிறது. குறைந்தபட்சம் தொலைநிலைக் கல்வி வழியாகவாவது பட்டம் வாங்கிவிடவேண்டும் என்று பலர் படிக்கிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ச்சி அடைந்துவிட முடியுமா என்னும் கேள்வி எனக்கு இருக்கிறது. மற்ற இந்திய மாநிலங்களுடன் ஒப்பிட்டுத் திருப்தியடைவதைவிட, வளர்ந்திருக்க வேண்டிய அளவு தமிழகம் ஏன் வளரவில்லை என்று பார்க்க வேண்டும். தமிழ்நாட்டுத் தமிழர்கள் வாழ்க்கைத் தரம் மேலும் உயராமல் இருப்பதற்கும், மக்களுக்கு அடிப்படை வசதி வாய்ப்புகள் வேண்டிய அளவு கிடைக்காமல் இருப்பதற்கும், மிக முக்கியமான காரணம் ஊழல். இதற்கு முன்னர் தமிழகத்தை ஆண்ட திமுகவும் ஊழல் செய்துள்ளது. என்றாலும், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தை ஆண்ட ஜெயலலிதா செய்த மாபெரும் வேதனை ஊழலை முழுமைப்படுத்தி, மையப்படுத்தி, ஒழுங்குபடுத்தியதுதான்.

முன்பெல்லாம் லஞ்சம் கொடுக்காமலும் தமிழகத்தில் சில செயல்கள் நடக்கலாம். இடையிடையே பலர் காசு பார்க்கலாம் சில அமைச்சர்கள், செயலர்கள் காசு வாங்காமலும் சில செயல்களைச் செய்யலாம். ஆனால், கடந்த ஐந்தாண்டு அதிமுக ஆட்சியில், ஒவ்வொரு துறையிலும் ஊழல் ஒழுங்குபடுத்தப்பட்டு, எந்தெந்தச் செயல்களுக்கு எவ்வளவு வாங்கவேண்டும் என்று ரேட் கார்ட் நிர்ணயிக்கப்பட்டு, இதிலிருந்து சிறிதும் வழுவாமல் செயல்படவேண்டும்



என்று ஆணை விதிக்கப்பட்டு, சேர்க்கப்பட்ட பணம் எப்படிப் பிரித்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் வழிமுறை தரப்பட்டிருக்கிறது. இது தமிழகம் கண்ட மாபெரும் புதுமை.

சமீபத்தில் அதிமுக கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, எம்.எல்.ஏ பதவியிலிருந்து விலகிய பழ.கருப்பையா இதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஊழல் மலிந்த தேசம் என்பதைத் தாண்டி, ஊழலால் நெறிப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை, வாழ்க்கைமுறை என்று ஆகியிருப்பது எவ்வளவு ஆபத்தானது? நான் சம்பந்தப்பட்டுள்ள பதிப்பகத்துறையில் 20 சதவிகிதம் கமிஷனை முதலிலேயே கொடுத்துவிட்டால்தான் அரசு நூலகங்களுக்கு ஆர்டர் கிடைக்கும். 20 லட்சம் கொடுத்தால் 1 கோடிக்கு ஆர்டர் கிடைக்கும். கொடுக்க முடியாதவர்களுக்கு ஆர்டர் இல்லை. கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு பைசாகூட லஞ்சம் தராது வாங்கப்பட்ட பொது நூலக ஆணை என்று எதுவும் இல்லை.

மற்ற துறை சார்ந்தவர்களுடன் பேசிப் பார்த்ததில் எல்லாத் துறைகளிலும் இதுதான் நிலை. ஒரு பைசாகூட லஞ்சம் தராது ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம் என்று எதுவும் இல்லை ஒரு பைசாகூட லஞ்சம் பெறாது தரப்பட்ட சாலை போடும் ஒப்பந்தம் என்று எதுவும் இல்லை ஒரு பைசாகூட லஞ்சம் பெறாது நியமிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், துணைவேந்தர்கள் என்று எவரும் இல்லை. ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு ஒப்பந்தத்திலும், ஒவ்வொரு நியமனத்திலும் இலக்கு வைத்து அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை விரட்டப்பட்டிருக்கின்றனர்.

இது நான் பலரிடம் பேசித் தெரிந்துகொண்ட தகவல்: தமிழ்நாட்டில் சி.பி.எஸ்.இ. பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க மாநில அரசிடம் நோ அப்ஜெக்ஷன் சான்றிதழ் பெற நாற்பது லட்ச ரூபாய், சமச்சீர் பள்ளி தொடங்கி எட்டாம் வகுப்பு வரை அனுமதி பெற ஆறு லட்ச ரூபாய், அதன்பின் ஒன்பது / பத்து வகுப்புகளுக்கான அனுமதிக்கும் இன்னொரு ஐந்து லட்சம், 11/12 வகுப்புகளுக்கு மேலும் ஐந்து லட்சம் என்று ரேட் கார்ட் போட்டு ஊழல் நடக்கிறது. அரசு கேபிள் டிவி தொடர்பாக சிறு பிரசுரமே வெளியாகும் அளவுக்குப் பல கோடிகளில் ஊழல் நடந்துள்ளது. ஒவ்வோர் அரசு அலுவலகத்திலும் ஒரு தாளைத் தள்ளப் பணம் கேட்கிறார்கள், கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று அடித்துப் பேசுகிறார்கள் என் உறவினர்கள். முதல்வருக்கு எதிராகச் சொத்துக் குவிப்பு வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தபோதே இதுதான் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருந்தது.

ஊழலுக்கு அடுத்தபடியான மிகப்பெரிய வேதனை, இந்த ஐந்தாண்டும் ஒரே இடத்தில் மொத்த அதிகாரமும் குவிக்கப்பட்டிருந்தது. அமைச்சர்கள், அதிகாரிகள் நினைத்த நேரத்தில் மாற்றப்பட்டார்கள். இதனால், அனைவருமே பேசத் தயங்கினார்கள். ஊடகம் என்றாலே ஓடினார்கள். இதற்கு முந்தைய ஜெயலலிதா ஆட்சியிலும் அமைச்சர்களுக்கு முடிவு எடுக்கும் அதிகாரம் இல்லை. இந்த ஆட்சியில் வழக்கு, உடல்நலப் பிரச்சினைகள் என்று சேர்ந்துகொள்ள, முதல்வரை அமைச்சர்களும் அதிகாரிகளும் சந்திப்பது சிக்கலாகிவிட, அரசு ஸ்தம்பித்துப் போனது. வெள்ளத்தை இந்த அரசு கையாண்ட விதத்தில் அது வெளிப்பட்டது. வெள்ளம் வரப்போகிறது எனத் தெரிந்தும் முன்னேற்பாடுகள் இல்லாமல் இந்த அரசு மழையை எதிர்கொண்டது. சென்னை, கடலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஐந்து மாவட்டங்களும் பாதிக்கப்பட்டது இந்த ஆட்சியின் மெத்தனத்தால்தான்.

அதிகமான சிறு தொழில்கள்தான் ஒரு மாநிலத்தின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும். ஆனால், அப்படியான வளர்ச்சித் திட்டங்கள், தொழிற்பேட்டை என்று சொல்லிக்கொள்ளும்படியாக ஒன்றும் இல்லை. சென்னையில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை ஒரு கண் துடைப்பு நாடகமாகத்தான் நான் பார்க்கிறேன்.

முந்தைய திமுக ஆட்சியுடன் ஒப்பிடும்போது மின்சார தடை குறைந்துள்ளதுதான். ஆனாலும், மின் உற்பத்தியில் கவலைப்பட வேண்டிய அளவு தமிழகம் பின்தங்கியுள்ளது. மின் உற்பத்தியை உருவாக்கக்கூடிய புதிய திட்டங்கள் எதுவும் இந்த ஐந்தாண்டு ஆட்சியில் உருப்படியாக உருவாக்கப்படவில்லை. முந்தைய திமுக ஆட்சியும் எதுவும் செய்யவில்லைதான் என்றாலும், அவர்கள் செய்யவில்லை என்பதுவே இவர்கள் செய்யாததற்கான நியாயமாகிவிடாது.

தமிழகம் பெரும் வருவாய் மாநிலமாக

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்...**


# AGARA

## ACCOUNTING & TAX SERVICES

**GTA SQUARE**
**Middlefield & Finch**

- Consulting
- Incorporation
- Corporate tax
- HST Rebate
- Business registration
- Full cycle of accounting
- Pay roll

**2015 TAX FILING**

- Over 20 years of experience
- E-filing
- Reasonable Rate
- Quick refund



**CALL - 416.275.5788**

# வாடகை Vs வாங்குதல்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் 461

நாம் வாழ்வதற்கு நியாயமான ஓர் இடம் தேவை என்பது உண்மை. இது சகலரிற்கும் பொருந்தும். உணவு, உடை, உறையுள் (வாழும் இடம்) மனிதனின் வாழ்வின் முக்கியமானவை. உறையுள் (ஆதனம்) தங்குவதற்கான பகுதி. இதனை இரண்டு வழிகளில் பெறலாம். ஒன்றில் சொந்தமாக வைத்திருக்கலாம் அல்லது வாடகைக்கு பெறலாம். வாடகை என்பது குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு வேறு ஒருவரிடம் இருந்து வாடகைக்கு பெற்று நாம் வாழ்வது. சொந்தமாக வாங்கும் போது நாமே அந்த மனைக்கு உரியவர்களாகின்றோம். செலவுகளும், கொடுப்பனவுகளும் நாமே செய்தல் வேண்டும். வாடகைக்கு பெற்று வாழும் போது நிலைமை சற்று வித்தியாசமாக இருக்கும்.

ஒருவர் வாடகை வீடு / மனையில் இருக்கப் போவதா அல்லது சொந்தமாக, உரிமை கொண்ட வீடு / மனையில் வாழ்வதா என்ற நிலையில் அவர்களின் நிதி நிலைமை முக்கியமான பங்கு வகிக்கின்றது. ஆனால் எமது மக்களின் அனேகமானவர்களில் மனப்பாங்கு சொந்தமாக ஆதனத்தை கொள்வனவு செய்வதே. கனடாவில் 65% இற்கு மேற்பட்டவர்கள் சொந்தமாக ஆதனத்தை கொண்டுள்ளார்கள். கனேடிய அரசும், தமது மக்கள் சொந்தமாக ஆதனத்தை வைத்திருப்பதனையே ஊக்குவிக்கின்றது. இதற்காக முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களிற்கு பல சலுகைகள் செய்து வருகின்றது. அவர்களை ஊக்குவிப்பதே நோக்கம்.

இன்றைய காலகட்டத்தில் முதல் தடவையாக வீடு, மனை வாங்குபவர்களின் நிலைமை மிகவும் இறுக்கமாகவும், கடினமாகவும் காணப்படுகின்றது.



குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட அதீதவிலை அதிகரிப்பு முதல் தடவை வீடு / மனை வாங்குபவர்களின் இன்றைய நிலைமையை கருத்தில் கொண்டு மத்திய அரசு பல சலுகைகளை வழங்குகின்ற போதும், குறிப்பாக ரொறொன்ரோ அத்துடன் அண்மித்த பகுதியில் தனிவீடு (Detached home), இரு வீடுகள் சேர்ந்தது (Semi Detached home), பல வீடுகள் சேர்ந்தவை (Attached homes) போன்றவற்றை வாங்குவது மிகவும் கஷ்டமாக உள்ளது. இதற்கு இவற்றின் இன்றைய விலையே ஒரு ஏதுவாக உள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்கு அடுக்கு மாடி மனைகளிலேயே இவர்கள் தங்க வேண்டியுள்ளது. நிலைமை மாறாமல் இருக்கும் வரை இவர்களின் நிலைமை இறுக்கமாகவே காணப்படும். மிகக் குறைந்த வட்டிவீதம் காணப்படுகின்ற போதும், வீடுகள் வாங்குவதற்கான ஆரம்ப முதலீடு அதிகம் தேவைப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

நிலைமை எவ்வாறாக இருந்தாலும், சொந்தமாக வீடு / மனை வாங்குவது நீண்ட காலத்தில் சிறப்பாகவே அமையும் என்பதனை புள்ளிவிபரங்கள் மிகவும் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. புதிதாக இந்நாட்டிற்கு குடிபெயர்ந்தவர்களினதும் அவர்களது பிள்ளைகளினதும் சொத்துரிமை அதிகமாகவே காணப்படுகின்றது. இதுவரை வீடுகளுக்கு மட்டுமே போட்டி போட்டு விற்பனை (Multiple Offers) நடைபெற்று வந்தனைக் காணக்கூடியதாக இருந்தது. கடந்த ஓரிரு மாதங்களாக அடுக்குமாடி மனைகளிலும் இந்நிலை ஆரம்பிப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக ஆதன வியாபாரம் என்பது மாறி மாறியே வரும். விலை கூடும், குறையும். அத்துடன் ஒரு காலகட்டத்தில் அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிக்கும். வேறு சில காலங்களில் தனி வீடு / இரு வீடுகள் / பல வீடுகள் சேர்ந்தவற்றின் வியாபாரம் அதிகரிக்கும். இந்த மாற்றத்தை கவனமாக அவதானித்தால் நிச்சயம் ஆதன வியாபாரத்தில் இலாபம் பெறலாம்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HomeLife / GTA Realty Inc. Brokerage.*

5215 Finch Ave, East. #203 Toronto, On. 416 315 9397

* independently owned and operated



Raja Mahendran, P Eng

HOTELS FOR SALE

Prominent Hotels Available For Sale in & around GTA. Price starting from $4 million

Sale /Lease

GTA Square
Middlefield & Finch
Commercial /office space
Size Upto 1000 Sq. Ft.
2nd Floor, 2- Lockers
1-Underground Parking
Available immediately

Retail space

Middlefield &Finch
Retail space
Size Upto 430 Sq. Ft.
Main Floor, corner unit
1-Underground Parking
Price Reduced to $159K
( from $169K)

BAKERY FOR RENT/SALE

Well Established Bakery in East Scarborough
**Close to:** 10 Highrise condos/Appartments, Schools, TTC,Community Centre,Library and Church.
**Included**:Bakery Equipments,Coolers & other accessories
Availabe Immediately For Rent or Sale

# உள்கட்டமைப்பு...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆம் நிதியாண்டுவரை துண்டுவிழும் தொகையை சேர்த்துப்பார்த்தாலும் கனேடிய அரசின் கடன் தொகைக்கும் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான தொடர்பு வீதமாகவே தொடர்ந்தும் 32% ஆக இருக்கும் என்கின்றது.

கனேடிய அரசின் வரவு செலவுத்திட்டம் பற்றி கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவி றோனா அம்றோஸ் இந்த வரவு செலவுத்திட்டம் ஒரு வேலை உருவாக்கும் திட்டங்கள் எதுவுமற்ற பொறுப்பற்ற செலவு களை உடைய வரவு செலவுத்திட்டம் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் லிபரல் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தின் போது தாங்கள் வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை $10 பில்லியனுக்குள் வைத்திருப்போம் என்றார் கள். ஆனால் இப்போது $30 பில்லியன் துண்டுவிழும் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்கள் என்றார்.

இந்த வரவு செலவுத்திட்டம் பற்றி கருத்து தெரிவித்த புதிய ஜனநாயகக்கட்சி தலைவர் ரொம் மல்கெயர் லிபரல் அரசு தேர்தல் காலத்தில் கூறியதை விட அதிகளவு செலவினங்களை உடைய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருந்தும் அவர்கள் தேர்தல் காலத்தில் உறுதி யளித்த பலவற்றை செய்யத்தவறிவிட்டனர் என்றார். அவர் மேலும் கனடாவின் முதற்குடிமக்களுக்கு தேர்தல் காலத்தில் உறுதியளித்த செலவினத்தை கல்வி மற்றும் குழந்தை பராமரிப்பில் செலவிட வில்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள் ளார். மேலும் லிபரல் கட்சி தேர்தல் காலத்தில் கூறிய சிறுவணிக நிறுவனங் களுக்கான நிறுவன வரி குறைப்பை இந்த வரவு செலவுத்திட்டத்தில் அரசு செய்யத் தவறியுள்ளது என்றார்.

கனேடிய நிதி அமைச்சர் ஊடகவியலாளர் களுக்கு தெரிவிக்கையில் கனேடியர்கள் தங்களிடம் இரண்டு விடயங்களை செய்யுமாறு கேட்டனர். ஒன்று "எனக்கும் எனது குடும்பத்திற்கும் உதவுங்கள்" என்பது. மற்றையது "எமது சந்ததியினரின் எதிர்காலத்திற்கு முதலீடு செய்யுங்கள்" என்பது. இவை இரண்டையும் கருத்திற் கொண்டே எமது வரவு செலவுத்திட்டத்தை தயார் செய்து சமர்ப்பித்தேன் என்றார்.

CBC ஊடக செய்தியின்படி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்த பிறகு Abacus நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின்படி கனேடிய பொது மக்களில் 51% ஆனவர் கள் இந்த வரவு செலவுத்திட்டத்திற்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். 34% ஆனவர்களே இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

# சுங்கவரி நெடுஞ்சாலைகள்

ஒன்ராரியோ மாகாண அரசு தனது 2016-2017 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் பரீட்சார்த்தமாக சுங்கவரி (Tolls) நெடுஞ்சாலை அமைப்ப தற்கு தீர்மானித்துள்ளது. இதற்கு Queen Elizabeth Way நெடுஞ்சாலையில் ஓக்வில் இல் இருக்கும் Trafalgar தெருவிற் கும் பேர்லிங்ரன் இல் இருக்கும் Guelph line தெருவிற்கும் இடைப்பட்ட 16.5 கி.மீ பாதை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பரீட்சார்த்தமாக சுங்கவரி அறவிடுதல் 2016 இன் கோடைகால இறுதியில் செப்ரெம்பர் மாதத்தில் Gardiner Expressway மற்றும் Don Valley Parkway இல் சுங்கவரி விதிப்பது பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு குழுவை அமைத்துள்ளது. Gardiner Expressway இல் ஒரு வேலை நாளில் 228,000 வாகனங்கள் செல்வதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் Don Valley Parkway இலும் ஒரு வேலை நாளில் 110,000 வாகனங்கள் செல்வதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.



ஆரம்பிக்கப்பட உள்ளது. இந்த பாதையை உபயோகிக்கும் வாகனங்களில் ஓட்டுனரை விட குறைந்தது இன்னொருவரும் இருக்க வேண்டும், அதாவது High Occupancy வாகனங்களே இப்பாதையை உபயோகிக்க முடியும்.

றொறொன்ரோ மாநகரசபை கடந்த

சுங்கவரி நெடுஞ் சாலைக்கு இரண்டு விதமாக பணம் அறவிடுவது பற்றி ஆய்வுகள் நடைபெறுகின்றன. ஒன்று ஒரு பக்க பயணத்திற்கு Gardiner Expressway மற்றும் Donvalley Parkway இரண்டிலும் பயணிக்க $1.25 இல் இருந்து $3.25 வரை அறவிடலாம் என ஆராயப்படுகிறது. மற்றையது ஒவ்வொரு கி.மீ பயணத்திற்கும் $0.10 இல் இருந்து $0.35 வரை அறவிடலாம் என ஆராயப்படுகிறது. இவ் இரண்டு முறை களிலும் பார ஊர்திகளுக்கு அறவிடப்படும் சுங்கவரி இரண்டு மடங்காக இருக்க வேண்டும் எனவும் கருதப்படுகிறது.

# அதிமுகவுக்கு...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

உங்களுக்கு மக்கள் மத்தியில் உங்கள் கட்சியின் பலம் என்ன?

அது தேர்தலுக்குப் பிறகுதான் தெரியும். மற்ற கட்சிகளை ஒப்பிடும்போது நாங்கள் புதிதாக வந்தவர்கள். இப்போதுதான் களமி-றங்குகிறோம். நான் ஓடுவேனா, ஓட மாட்டேனா என்பதை ஓடவிட்டுப் பார்த்தால் தானே தெரியும். சாதி வாக்கு வங்கி, மத வாக்கு வங்கி, திராவிட வாக்கு வங்கி, இந்திய அரசியல் வாக்கு வங்கி இருக்கிறது. தமிழனுக்கு ஒரு வாக்கு வங்கி இருக்கிறதா இல்லையா? அதுக்கு மக்களிடம் வரவேற்பு இருக்கிறதா இல்லையா? என்பது தேர்தலுக்குப் பிறகு தெரிந்துவிடும்.

தனித்து நின்று சோதித்துக்கொள்வதை விட கூட்டணி சேர்ந்து சீட்டுக்கள் பெறுவது சாதுரியம் இல்லையா?

2010-ல் கட்சி தொடங்கும்போதே கூட்டு சேர்வதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்தோம். அதில் இப்போதும் உறுதியாக இருக்கிறோம். பல பேர் இவ்வளவு சீட்டு இவ்வளவு பணம் தருகிறோம் என்று என்னிடம் பேசினார்கள். நான் அசைந்து கொடுக்கவில்லை. பத்து இருபது சீட்டோ பணமோ எனக்குத் தேவையில்லை. எனக்கு இந்த நாடும் அதை ஆளும் அதிகாரமும் தான் தேவை. என் தத்துவமே ஊழல் லஞ்சத்தை ஒழிக்கணும் என்பதுதான். அப்படி இருக்கும்போது அப்படியொரு தூய நிர்வாகத்தை எந்த கட்சி நடத்தியிருக்கு? அதனுடன் நாங்கள் கூட்டு சேர?

ஆனால், தனித்து நின்று வெற்றிபெறும் அளவுக்கு நாம் தமிழர் கட்சிக்கு வாக்கு வங்கி இருக்கிறதா?

கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் என்ன வாக்கு வங்கி இருக்கிறது? கருணாநிதிக்கு ஒரு ஓட்டு, ஜெயலலிதாவுக்கு ஒரு ஓட்டுத் தானே? என் மாமன் மச்சான் உள்ளிட்ட சொந்தங்கள்தானே அவங்களோட வாக்கு வங்கியா இருக்காங்க. இப்போ என் உறவு கள் எங்களோட வாக்கு வங்கியா மாறாதா? ஆட்சி மாற்றத்தை விரும்பும் நடுநிலையாளர் கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த நடு நிலை எதைத் தீர்மானிக்கிறதோ அதுதான் வாக்கு வங்கி, அதுதான் வெற்றி பெறும்.

ஸ்டாலினின் நமக்கு நாமே விடியல் பயணம், மக்கள் நலக்கூட்டணி, காங்கிரஸ் கொள்கை, விஜயகாந்தின் அரசியல் போக்குகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?

ஸ்டாலின் போன இடத்திலெல்லாம் கூடிய கூட்டம் செட்டிங் கிரவுடுதான். கருணாநிதி யின் மகன் என்பதைத் தாண்டி ஸ்டாலி னிக்கு சொந்த பலம் ஒன்று என்பதே இல்லை. அவர் அப்பா கெடுத்தது பத்தாது என்று இவர் பங்குக்கு நாட்டைக் கெடுக்க பார்க்கிறாரா? விடமாட்டோம். தேமுதிக விடம் திமுக மண்டியிட்டு நின்றது, விஜயகாந்தின் வலிமையைக் காட்ட வில்லை. திமுகவின் பலவீனத்தையே காட்டுகிறது. அரசியல் பேரம் என்பதைத் தாண்டி அரசியல் விபச்சாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். இவர்களு டன் கூட்டு சேர்ந்துள்ள காங்கிரஸ் தமிழ்நாட்டில் தன் அந்திம காலத்தில் இருக்கிறது. லால் பகதூர் சாஸ்திரி, நேரு, இந்திரா காந்தி, காமராஜர் போன்ற தலைவர்கள் இருந்த காங்கிரஸ் கட்சியை இன்று குஷ்பு, நக்மாதான் காப்பாற்ற



- சிவதாணு -

வேண்டி இருக்கிறது. இளங்கோவனுக்கு அவர்களை வர்ணிக்கவே நேரம் இருக்கிறது. விஜயகாந்துக்குத் தனிப்பட்ட முறையில் உடல் ரீதியிலான தடுமாற்றங்கள் இருக்கு. செறிவான கருத்துக்களை உள்வாங்கி பதில் அளிக்க வலிமை இல்லாததால் பண்பாடற்ற செயல்களில் ஈடுபடுகிறார். அவருக்கென்று கட்சி கொள்கையும் இல்லை, கோட்பாடும் இல்லை. நாங்கள் லட்சியத்தைத் தொற்றிக்கொண்டு கட்சி நடத்துகிறோம். விஜயகாந்த் பணம் காய்க்கும் மரத்தைத் தொற்றிக்கொண்டு கட்சி நடத்துகிறார்.

மக்கள் நலக் கூட்டணியினர், மாற்று அணி என்று சொல்லிக்கொண்டு சேர்ந்திருக்கிறார் கள். மாற்று என்பது ஆரம்பத்தில் இருந்தே இருந்திருக்க வேண்டும். திமுக, அதிமுக ஊழல் கட்சி என்று சொல்கிறார்கள். அதை இப்போதுதான் கண்டுபிடித்திருக்கிறார்கள் போல. அந்த கட்சிகள் ஊழல் செய்தபோது கூட இருந்தவர்கள்தானே இவர்கள். திருடனாலும், திருடன்கூட இருந்தாலும் ஒன்றுதானே? மக்களிடம் இவர்களின் போலித்தனம் எடுபடாது. தேமுதிக, மக்கள் நலக்கூட்டணி இணைந்தால் தமிழனுக்கு எந்த மாற்றமும், பயனும் நிகழப்போவதில்லை.

இவர்கள் எல்லாம் எங்களுக்குப் போட்டியில்லை. நாங்கள் போட்டியாக நினைப்பது அதிமுகவை மட்டும்தான்!




# யாருக்கு வாக்களிப்பார்கள் புதிய வாக்காளர்கள்?

## தமிழ்நாடு சட்டசபை தேர்தல்

தமிழ்நாட்டில் வரும் மே 16ஆம் தேதி நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில், பதினெட்டு வயது பூர்த்தியாகி புதிதாக வாக்களிக்கப் போகிறவர்கள் எண்ணிக்கை, சுமார் எழுபது லட்சம் பேர். அதாவது, 2011 சட்டசபை தேர்தலுக்குப் பிறகு வாக்காளர்களாக இணைந்தவர்கள் இவர்கள். இவர்களையும் சேர்த்து தமிழ்நாட்டில் 29 வயது வரை உள்ள இளம் வாக்காளர்கள் கிட்டதட்ட இரண்டு கோடி என்கிறது இந்தியத் தேர்தல் ஆணையம் புள்ளி விபரம். இந்த இளைஞர் பட்டாளத்தின் வாக்குகள்தான் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கப் போகின்றது என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். "திமுக, அதிமுக இரண்டு கட்சிகளின் 50 வருட ஆட்சிக்கு இந்தத் தேர்தலில் முற்றுப்புள்ளி வைக்கப் படும்" என்று மக்கள் நலக் கூட்டணியும் பாமகவும் உறுதியாக கூறி வருவது இந்த இளம் வாக்காளர்கள் மீது நம்பிக்கை வைத்துத்தான். தமிழ்நாட்டு இளைஞர்கள் மாற்றத்தை உருவாக்குவார்களா?

**- சிவதாணு -**

அதிக எண்ணிக்கையில் புதிய வாக்காளர்கள் வருவது தமிழ்நாடு சட்டசபை தேர்தல் வரலாற்றில் இது முதல் முறையல்ல. எல்லாத் தேர்தல்களிலும் கணிசமான தொகை புதிய வாக்காளர்கள் சேர்ந்துதான் வருகிறார்கள். அதாவது ஒவ்வொரு தேர்தலிலும் அதற்கு முந்தைய தேர்தலை விட வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆச்சரியமாக ஒரே ஒரு தேர்தலில் மட்டும் அதற்கு முந்தைய தேர்தலைவிட வாக்காளர்கள் எண்ணிக்கை குறைந்தது. 2006 தேர்தலில், அதற்கு முந்தைய 2001 தேர்தலைவிட 8 லட்சம் வாக்காளர்கள் குறைந்துள்ளார்கள்.

சுதந்திரத்துக்குப் பிறகு முதல்முறையாக தமிழகத்தில் அரசியல் மாற்றம் நிகழ்ந்தது 1967ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில்தான். திமுக முதன்முறையாக ஆட்சியைப் பிடித்தது. அண்ணாத்துரை முதல்வரானார். இந்த மாற்றத்துக்கு இளைஞர்களிடையே உதித்த அரசியல் எழுச்சி காரணம் என்பது வரலாறு.

அந்தத் தேர்தலில் 2,07,99,362ஆக இருந்த வாக்காளர் எண்ணிக்கை 1971 சட்டமன்ற தேர்தலில் 2,30,64,983 ஆனது. புதிய வாக்காளர்கள்: 22,65,621. அடுத்து வந்த 1977 தேர்தலில் 2,81,61,418 ஆனது. கிட்டத்தட்ட 50 லட்சத்துக்கும் மேல் புதிய வாக்காளர்கள் சேர்ந்தார்கள். இதற்கு அடுத்து 1989 சட்டமன்ற தேர்தலில்தான் இதுபோல் அதிக எண்ணைக்கையில் புதிய வாக்காளர்கள் இணைந்தார்கள். அதற்கு முந்தைய 1984 தேர்தலைவிட 52 லட்சம் புதிய வாக்காளர்கள் 1989 தேர்தலில் சேர்ந்தார்கள். அதன்பிறகும் 1991இல் 47 லட்சம், 2001இல் 50 லட்சம் என புதியவர்கள் அதிகமாக வாக்களித்த பல தேர்தல்களை தமிழ்நாடு கடந்து வந்திருக்கிறது.

1967க்குப் பிறகு அதிகம் புதிய வாக்காளர்கள் இணைந்த 1977 தேர்தலில் முதன்முறையாக எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார். இதனையடுத்து அதிகம் புதிய வாக்காளர்கள் இணைந்த 1989 தேர்தலில் 150 இடங்களில் திமுக வெற்றிபெற்றது. 12 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், மூன்றாவது முறையாகக் கருணாநிதி தமிழக முதல்வரானார். அதன்பின்னர் 1991ஆம் 2001 தேர்தல்களில் அதிகம் புதிய வாக்காளர்கள் இணைந்தார்கள் என்றாலும், 1989க்குப் பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் அதிமுக, திமுக என மாறிமாறி வெற்றிபெற்றுள்ளன. 2011 சட்டமன்ற தேர்தலில் தமிழக வாக்காளர்கள் எண்ணிக்கை 4,71,16,687 கோடியாக இருந்தது. இவர்களுடன் வரும் தேர்தலில் சுமார் 70 லட்சம் புதிய வாக்காளர்கள் இணைகிறார்கள். ஆனால், இவர்களில் பெரும்பான்மையினருக்கு சட்டமன்றத் தேர்தல்தான் புதிது. 2014 நாடாளுமன்றத் தேர்தலிலேயே இவர்களில் ஒருபகுதியினர் தங்கள் முதல் வாக்கை செலுத்துவிட்டார்கள். 2014 நாடாளுமன்ற




தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கை 5,37,52,682 கோடி. இதில் சுமார் 66 லட்சம் பேர், 2011 சட்டமன்ற தேர்தலுக்கு பின் 3 ஆண்டிற்குள் இணைந்தவர்கள்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


# ஜெயலலிதா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது. மது, விற்பனை வரி போன்றவை மூலம் அரசுக்கு அதிக வருமானம் வருகிறது. இதன்மூலம் சமூக வளர்ச்சித்



- சிவதாணு -

திட்டங்களை இந்த அரசு செயல்படுத்துகிறது. அப்படி இந்த அரசு கொண்டுவந்த திட்டங்களில் அம்மா உணவகம் வரவேற்கப்பட வேண்டியது என்று நான் நினைக்கிறேன். பொதுவாக மானியங்கள் கொடுப்பதை ஊக்கப்படுத்தக் கூடாது என்பதுதான் என் பொருளாதாரக் கொள்கை. ஆனாலும், பசியைப் போக்கும் மிகச் சில விதிவிலக்குகள் மட்டுமே இருக்கலாம் என நினைக்கிறேன்.

இன்றும் தமிழ்நாட்டில் பசியால் வாடுபவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் அம்மா உணவகம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்களுக்கு இது மிகப்பெரிய வரப்பிரசாதம். மலிவு விலையில் மக்கள் பசியாறுவது நல்ல விஷயம்தான். அதேசமயம், திட்டத்தை அறிவித்துவிட்டு அதற்கான நிதியை ஒதுக்காமல் அதை மாநகராட்சிகளின் தலையில் சுமத்தியுள்ளனர். வேறு எதற்கோ செலவிட வேண்டிய நிதி இதற்குச் செல்கிறது. எனவே, இதன் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறது என்ற கேள்வி இருக்கிறது. அம்மா உணவகத்தை வரவேற்கும் போதே அம்மா குடிநீர், அம்மா உப்பு போன்றவை தேவையில்லாத திட்டங்கள் என்றே நான் நினைக்கிறேன். அம்மா குடிநீர் திட்டச் சுமை போக்குவரத்துத் துறையின் மேல் ஏற்றப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை செய்ய வேண்டிய வேலையில்லை இது.

சிறுசிறு கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தவிரப் பெரிய அளவில் சட்ட ஒழுங்கு பிரச்சினை இல்லை என்பதையும் அதிமுக ஆட்சியின் சாதனையாக நான் பார்க்கிறேன்.

# கியூபாவில் அமெரிக்கா அதிபர் ஒபாமாவுக்கு உற்சாக வரவேற்பு!

அமெரிக்கா அதிபர் ஒபாமா வரலாற்று சிறப்புமிக்க பயணமாக கியூபா சென்றார். கியூபா தலைநகர் ஹவானாவில் ஒபாமாவுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 88 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா அதிபர் ஒருவர் கியூபா செல்வது இதுவே முதல் முறை. அரை நூற்றாண்டு காலமாக அமெரிக்காவும் கியூபாவும் பகை நாடுகளாக இருந்து வந்தன. கியூபாவில் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய பிடல் காஸ்ட்ரோவின் நடவடிக்கையை அமெரிக்கா விரும்பாமல் இருந்தது. இதனால் கியூபா மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்து வந்தது. அத்துடன் பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்யவும் பல முறை அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. முயற்சித்திருந்தது. இருப்பினும் கியூபாவின் சோசலிச அரசு அரை நூற்றாண்டுக்கும் மேலாக நிற்கிறது. அமெரிக்கா கியூபாவுடனான மோதல் போக்கு தற்போது முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து கியூபாவுக்கு நட்புக்கரம் நீட்டினார் ஒபாமா. கடந்த சில ஆண்டுகளாக இரு நாடுகளிடையே நட்பு மலர்ந்தது. கியூபா மீதான சில பொருளாதாரத் தடைகள் விலக்கப்பட்டன.



இரு நாடுகளும் அரசியல் கைதிகளை விடுவித்தன. ஒபாமா 2016 மார்ச் 20இல் வரலாற்று சிறப்புமிக்க பயணமாக கியூபா சென்றடைந்தார். 88 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவின் அதிபர் ஒருவர் கியூபா செல்வது இதுவே முதல் முறையாகும். ஹவானா விமான நிலையத்தில் ஒபாமா, மனைவி மிஷெல் ஒபாமா, மகள்கள் ஷாசா, மலியா ஆகியோருக்கு செங்கம்பளம் விரித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கியூபாவுக்கு ஒபாமா சென்று சேர்ந்ததும், கியூபா மொழியில் ஒபாமா தனது ட்விட்டரில், வரலாற்று சிறப்புமிக்க தருணம், கியூபா வந்து சேர்ந்தேன். கியூபா நாட்டு மக்களை நேரடியாக சந்தித்து பேசுவதை எதிர்நோக்கி காத்து இருக்கிறேன் என பதிவிட்டுள்ளார். கியூபா அதிபர் ராகுல் காஸ்ரோவை ஒபாமா சந்தித்து பேசினார்.

# யாருக்கு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

2014 நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில், இப்போது போலவே, "இந்த 65 லட்சம் புதிய வாக்காளர்கள் ஓட்டு எங்களுக்குத்தான் இவர்கள்தான் மாற்றத்தை உருவாக்கப் போகிறார்கள்" என எல்லாக் கட்சிகளும் சொன்னது. நரேந்திர மோடியைப் பிரதமராக முன்னிறுத்திய பாஜக கூட்டணி தமிழகத்தில் 10 இடங்கள் வரை வெல்லும் எனக் கணித்த வட இந்திய ஊடகங்கள்கூட அதற்கு இந்தப் புதிய வாக்காளர்களையே காரணமாகச் சொன்னது. ஆனால், தேர்தல் முடிவுகள் வந்தபோது, பாஜக கூட்டணி தமிழகத்தில் 2 இடங்களில் மட்டுமே வென்றது. அதுவும் தர்மபுரியில் அன்புமணி ராமதாஸ் தன் சாதி செல்வாக்காலே வென்றார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். கன்னியாகுமரியில் பொன் ராதாகிருஷ்ணன் மட்டுமே பாஜக சார்பில் வெற்றிபெற்றார். இந்தக் கூட்டணியில் இருந்த வைகோவின் மதிமுகவும் விஜயகாந்தின் தேமுதிகவும் ஒரு தொகுதியில்கூட வெல்லவில்லை. 39இல் 37 இடங்களில் அதிமுக வெற்றி பெற்று சரித்திரம் படைத்தது. ஆனாலும், "நாடாளுமன்றத் தேர்தலுக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கும் தனித்தனி கணக்கு வைத்திருக்கிறார்கள் தமிழக வாக்காளர் கள். 2014 தேர்தல் முடிவை இந்தத் தேர்தலுடன் ஒப்பிட முடியாது" என்று கூறி, இப்போது மீண்டும் இந்த இளம் வாக்காளர்களைக் குறிவைக்கின்றன எல்லாக் கட்சிகளும். புதிய வாக்காளர்கள் ஓட்டு எங்களுக்குத்தான் என்கின்றன.




ஒன்று மட்டும் நிச்சயம்... புதிய வாக்காளர்கள் அதிகம் சேர்ந்த, புதிய வாய்ப்புகளும் இருந்த 1967 (அண்ணா), 1977 (எம்ஜிஆர்), 1989 (கருணாநிதி) தேர்தல்களில் மாற்றத்தை உருவாக்கி இருக்கிறார்கள் இளைஞர்கள். அந்த மாற்றம் இந்த சட்டமன்றத் தேர்தலிலும் நிகழுமா?

மே 19ஆம் தேதி தெரிந்துவிடும்!

### *Personal Prayer To The Holy Spirit*

Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - ***RR, RM, RV, RRK***



Our Mother of Perpetual Help

# நிருபிக்கப்பட்ட G7-500

# கணித வெற்றி நெறி

**For Gr. 7**

கடந்த **27** வருடத்திற்கும் மேலாக கணிதபாடம் கற்பித்தல் ஏற்பட்ட அனுபவத்தில், தரம் 11, 12இல் பயிலும் மாணவர்கள் மிக அவதிக்குட்படுவதைக் கண்காணிக்கக்கூடியதாக இருந்தது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்க்கவென்றே எமது முழு அனுபவங்களையும் திரட்டி May2015இல் மிகப்பெரிய கணித கல்வி நெறியொன்றான **G8-400** ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மிகச்சிறப்பான வெற்றிகிட்டியதோடு, மேலும் புதிய அதினுண்மையும் புலப்பட்டது. இப்புதிய அனுபவத்துடன் பல பெற்றோரின் வேண்டுதலினையும் செவிமடுத்ததில் இவ்வருடம் **G7-500** எனப்படும் புதிய கணித பாடத்திட்டம் தற்சமயம் தரம் 7இல் பயிலும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் முழுவிபரங்களை மாணவர்களும் பெற்றோர்களும் அறியும் பொருட்டு ஓர் சிறிய கணித அறிமுகதேர்வு நடைபெறவுள்ளது. ஆர்வமுடைய பெற்றோர்கள் பின்வரும் மின்அஞ்சல்மூலம் மாணவர் பெயர், பாடசாலை, தொலைபேசி இல., இவற்றுடன் முற்பதிவுசெய்யவும்.



அறிமுகத் தேர்வு: **May 21/2016**

பதிவுத் தேதி இறுதிநாள்: **May 16/2016**

மின் அஞ்சல் : **g7.500math@gmail.com**

## New classes for 2016 / 17

- For current Gr.7 **New** — G7-500 — starts: May 23/16
- For current Gr.8 **New** — G8-400 — starts: May 23/16
- For current Gr.10 — G11 & 12 — starts: May 1/16

Entire new program, Helps students score 90's and above in Function(G11) and AF(G12)

*University Level

- For current Gr.11 — G12-100AFCV — starts: May 15/16

**(Advanced Function, Calculus &Vectors)**

The most wanted program for Gr.11. If anyone is thinking of going into higher level University for a life science or Engineering program, You must consider this Program.

*University Level

மேலதிக தகவல்களுக்கு

**Info: 416-666-5515**

**MATH WORLD**
MOST ADVANCED TALENTED HELP

| | வாடகை *(Renting)* | வாங்குதல் *(Buying)* |
|---|---|---|
| செலவு | பொதுவாக குறைவாக காணப்படும்<br>குறிப்பிட்டளவு மாதாந்த கொடுப்பனவு<br>வாடகைக்குரிய முற்பணம் கொடுத்தல் வேண்டும் | பொதுவாக அதிகமான மாதாந்த கொடுப்பனவு<br>(Mortgage, Property tax, Utilities, Mainteance, Insurance)<br>அடமானக் கடனிற்குரிய வட்டிச் செலவு<br>எதிர்பாராத வீட்டுச்செலவு |
| ***Investment potential*** | வாடகைப்பணம் வீட்டு உரிமையாளரிற்கே செல்லும் | ஒரு பகுதி மாதாந்த கொடுப்பனவு சேமிப்பாக மாறுகின்றது. வீடு, மனை விலை அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் உண்டு. |
| வருமானம் | அறைகளாக, கீழ்பகுதி வாடகைக்கு கொடுத்து பணம் பெறலாம் | ஒரு பகுதியை வாடகைக்கு கொடுக்கலாம். வீட்டிற்கு எதிராக பணம் எடுத்து முதலீடு செய்யக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. |
| ***Maintenance*** | அனேக சந்தர்ப்பங்களில் வீட்டு உரிமையாளரே பொறுப்பு | எப்பொழுதும் உரிமையாளரின் பொறுப்பு |
| ***Commute*** தொழில் சார்பாக சென்று வரும் தூரம் | தொழிலிற்கு ஏற்ப இடத்தை தெரிவு செய்யலாம் | வருமானத்திற்கேற்ப வீடு, மனை வாங்கும் போது தெழிலிற்கு சென்றுவரும் நேரம் அதிகம் எடுக்கும். |
| வெளியேறும் காலம் | பொதுவாக எந்த நேரத்திலும் ஆதனத்தை விட்டு வெளியேறலாம். | சந்தையிலிட்டு விற்கப்படல் வேண்டும்<br>அடமானக்கடனிற்கு தண்டம் ஏற்படலாம் |

**தெரிந்திருக்க**

- வெள்ளை நிற சுவர் (wall) 80% ஆன வெளிசத்தையும் கறுப்பு நிற சுவர் 10% ஆன வெளிச்சந்தையும் தெறிக்கப்பண்ணுகிறது.
- ஒரு துளி தண்ணீர் ஒரு செக்கனில் வீணாகும். ஒரு வருடத்தில் 8,448 லீற்றர் தண்ணீரை மொத்தமாக விரயமாகின்றது.
- சாதாரணமாக வீடுகளில் வருடத்திற்கு 416 தடவை Washing Machine பாவிக்கப்படுகின்றது.
- மாலை 9 இக்கும் காலை 7 இக்கும் இடையில் எமது தேவைகளிற்காக Electricity ஐ பாவிப்பதால் மேலதிக பணத்தை சேமிக்கலாம்.

# சர்ச்சையில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி



கொள்ளப்பட்ட செலவின மதிப் பீட்டுத் தொகையில், ஏழு வருடங்கள் கழிந்த பின்னரும் வீடொன்றை அமைப்பது சாத்தியமற்றது என்று பாதிக்கப் பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, சம்பூர் பிரதேசத்தில் அண்மையில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பத்தினர் இந்திய உதவியிலான இந்த வீடுகளை பெறுவதற்கு தயக்கம் தெரிவித்துள்ளனர். அந்த மக்களால் தெரிவிக்கப்படும் இக்கருத்து நியாயமானதே. இவ்வாறான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். மாகாணசபை நிர்வாகமும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பில் துரிதமாக செயற்பட்டு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

# எதிர்வரும் ஸ்காபரோ ரூஜ் ரிவர் இடைத்தேர்தலில் லிபரல் கட்சி வேட்பாளர் நியமனத்தைக் கோரவிருக்கும் பிரகல் திரு

அனுபவம் கொண்ட சமூக ஒருங்கிணைப்பாளரும் நீண்ட கால அரச பணியாளருமான பிரகல் திரு March 28, 2016 ஒன்ராரியோ லிபரல் கட்சியின் ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் வேட்பாளர் நியமனத்தைக் கோரும் தனது நோக்கத்தை அறிவித்தார்.

"ஒன்ராரியோவின் கடின உழைப்பாளர்களை தன்னகத்தே கொண்ட ஒரு பிரதேசத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினராக வருவதற்கான எனது விண்ணப்பத்தினை முன்வைப்பதை நான் ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகின்றேன்." என்று தெரிவிக்கிறார் பிரகல். "ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் தொகுதி என்பது பன்மைத்துவமும் துடிப்பும் கொண்ட ஒரு பிரதேசமாகும். இந்தப்பிரதேசத்தில் பல்வேறு மட்டங்களில் நான் மிகவும் ஆழமான அர்ப்பணிப்புடன் கூடிய நடவடிக்கைகளில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்துள்ளேன். இந்தப்பிர-திநிதித்துவத்துக்கான வாய்ப்பினைக் கோருவதன் மூலம் ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் இன் அபிலாஷைகளை குயின்ஸ் பார்க் இல் உரத்துப்பேசுவதற்கு முடியுமென்று நம்புகின்றேன்." என்று அவர் மீண்டும் தெரிவித்தார்.

சமத்துவமான வாய்ப்புக்களையும் பன்முகப்பட்ட மக்களையும் உள்ளீர்த்து பன்முகப்பாட்டைப் பேணுகின்ற வழிமுறைகளையும் கொள்கைகளையும் வகுக்கின்ற முக்கியமான பொறுப்பைப் பிரதேச நகரசபை ஒன்றில் பிரகல் வகிக்கின்றார். ரொறொன்ரோவிலும், ஹமில்டனிலும் நகர உருவாக்கத்தின் அமைப்பாளர்களுக்கான தலைமைத்துவ வளர்ச்சித் திட்டத்தின் civic action fellow



ஆகப் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் கனடியத் தமிழ்க் கொங்கிரசின் முன்னாள் பணிப்பாளர்களில் ஒருவருமாவார். ரொறொன்ரோ "யோர்க் பிரதேச யுனைட்டட் வே" இன் செயலணியில் உறுப்பினராக இருந்தவர். அதுபோல Rouge Valley Health System Foundation இன் செயலணியிலும் பணியாற்றியவர். கனடிய பழங்குடித் தொழில்முறை வல்லுனர்கள் (Aboriginal Professional Association) அமைப்பின் நிறுவக உறுப்பினர்.

பிரகல் திரு ஒரு அனுபவம் மிக்க அரசியல் ஒருங்கமைப்பாளர். தற்போது ஒன்ராரியோ லிபரல் கட்சியின் இணைப்புக்கான செயற்பாட்டின் பிரதித் தலைவராக இருக்கும் அவர், பல மாநகர, மாகாண மற்றும் மத்திய அரசுகளின் அரசியல் பிரச்சாரங்களுக்கு ஆலோசனை வழங்கியும் தலைமை தாங்கியும் இருக்கிறார். பிரகல் திரு சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிபட்டமும் பொதுகொள்கை, நிர்வாகம் மற்றும் சட்டத்தில் (Public Policy, Administration and Law) யோர்க் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டமும் பெற்றுள்ளார். இரண்டாவது எலிசபெத் மகாராணி வைர பதக்கம், மற்றும் ஒன்ராரியோ தொண்டர் சேவை விருது என்பன உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான பாஸ் பல்கிசூனின் பதவி விலகியதை அடுத்து திருவின் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது. முதல்வர் கத்லீன் வின் அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஒரு இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களிற்கு ***www.electpiragalthiru.ca***



# மக்களுக்காக வாழ்ந்த கோடீஸ்வரன்

றொறொன்ரோ மாநகரசபையின் 64ஆவது மாநகரமுதல்வர் றொப் போர்ட் 2016 மார்ச் 22இல் தீவிர புற்றுநோயின் (Pleomorphic Liposarcoma) தாக்கத்தால் 46 வயதில் காலமானார். இவருக்கு மனைவி Renata உம் Stephanie மற்றும் Dougie என இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

றொப் போர்ட் 2010இல் இருந்து 2014வரை றொறொன்ரோ மாநகரசபை முதல்வராக இருந்தார். இவர் 2000இல் இருந்து 2010 வரையும் அதன் பின்னர் 2014இல் இருந்து இறக்கும் வரையும் எற்றோபிக்கோ வடக்கு வட்டாரத்தின் றொறொன்ரோ மாநகரசபையின் உறுப்பினராக இருந்தார். மாநகரசபையின் வீண்செலவுகளுக்கு எதிராக குரல் கொடுத்து வந்த றொப் போர்ட் தான் முதல்வரானதும் மாநகரசபையின் பல அனாவசிய செலவுகளை குறைத்தார்.

றொப் போர்ட் கால்பந்தாட்ட பயிற்றுனராக பலகாலமாக இருந்தார். 2001இல் இருந்து Don Bosco கத்தோலிக்க உயர்தர பாடசாலை கால்பந்தாட்டக் கழக பயிற்றுனராக இருந்தார். அவர் தனது சொந்த செலவில் $20,000 இற்கு இக்கழகத்திற்கு காலப்பந்தாட்ட உபகரணங்கள் வாங்கி கொடுத்தார். இவரால் பயிற்றுவிக்கப்பட்ட கால்பந்தாட்ட வீரர்கள் பலர் அதுவும் பல சிறுபான்மை இனத்தவர்கள் தற்போது பல பல்கலைகழக மாணவர்களாகவும், பட்டதாரிகளாகவும் உள்ளனர்.

றொப் போர்ட் மாநகரசபை உறுப்பினராகவும், மாநகர முதல்வராகவும் இருக்கும்போது நகர மக்களிடம் இருந்து தனக்கு வரும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பிற்கும் பதில் அளித்தவர் என்பதும் பொதுமக்களின் எந்த முறைப்பாட்டையும் விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாநகரசபையின் வீண் விரயங்களை குறைத்து பொதுமக்களின் பணத்தை சேமிக்க எடுத்த அவரது முயற்சியால் பாதிக்கப்பட்ட தீவிர இடது சாரி போக்காளர்களால் அநாவசியமாக விமர்சிக்கப்பட்டார் என Don Cherry தனது இரங்கலில் எழுதியுள்ளார்.

மாநகரசபை உறுப்பினர்களின் பிரயாணச்செலவுகளுக்கு என தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் அவர்களது சம்பளத்திற்கு மேலாக வழங்கப்பட்டு வந்த $200,000 சலுகை பணத்தை தீவிரமாக எதிர்த்ததால் பல சக மாநகர-சபை உறுப்பினர்களின் ஆதரவை இழந்தார். றொப் போர்ட் தனது பதவிக்காலத்தில் பிரயாணச்செலவாக $10 ஐ மட்டுமே சம்பளத்திற்கு மேலாக எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Don Cherry இவரைப் பற்றி கூறுகையில் றொப் போர்ட்டின் போதைவஸ்து பழக்கம் அவரது உடல் நலத்திற்கு மட்டுமே கேடாக இருந்தது. அவர் செய்த சேவைக்கோ அல்லது அவரது பணிக்கோ அது இடஞ்சலாக இருக்கவில்லை என்றார். நாட்டில் உள்ள பல அரசியல்வாதிகள் றொப் போர்டை விட மோசமான போதைவஸ்து பழக்கங்களில் ஈடுபட்டிருந்தும் றொப் போர்ட்டை பல ஊடகங்கள் அநாவசியமாக தீவிரமாக விமர்ச்சித்து வந்தன என மேலும் தெரிவித்தார்.

மிசிசாகா முன்னாள் நகரசபை முதல்வர் Hazel Mccallion தனது இரங்கல் உரையில் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் அத்துமீறி நுழையும் ஊடகங்களை விமர்சித்த அவர் ஊடகவியலாளர்கள் ஒரு விடயத்தில் தலையிட்டால் எப்போது அதை விட்டு விலகவேண்டுமென அவர்களுக்குத் தெரியாது என்றார். பிள்ளைகளுக்கு



விளையாட்டு பயிற்றுவிக்கும் கால்பந்தாட்டக் கழகத்துக்கு நிதி சேகரிப்பதற்கு அலுவலக முகவரியை பாவித்தமைக்கு றொப் போர்ட்டை நீதிமன்றத்தில் நிறுத்தியது ஒரு அருவருக்கத்தக்க செயல் என்றார். அவரிற்கு இறுதி மரியாதையைச் செலுத்த வரிசையில் நிற்கும் ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்தாலே தெரியும் றொப் போர்ட் மக்களுக்காகவே வாழ்ந்தவர் என்பது.


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**

**Cell: 416.816.7994** **Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group — IA Industrial Alliance Insurance and Financial Services Inc. — Assumption Life

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# ஆயுள் காப்புறுதியில் பாடத்தினை புகட்டும் தம்பதிகளின் கதை!

## கனடிய தகவல் தொடர் 246

'Couple's Story Offers Lesson In Life Insurance' என்னும் தலைப்பில் மார்ச் 21, 2009 ஆம் ஆண்டு 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்திருந்தது.

கனடாவில் காப்புறுதி தொடர்பான தகவல்கள் செய்திகள், சட்டங்களின் மாற்றங்கள், நீதிமன்றம் வரை சென்ற வழக்குகள் அங்கு வழங்கப்பட்ட தீர்ப்புகள் என பரபரப்பான விடயங்கள் ஏதாவது கிடைக்குமா? என சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய தளங்களில் தேடிய போது இந்த செய்தி கிடைத்தது.

உயிரிழப்பின் பின்பு நட்டஈடு கோரலின் போது, அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், விரக்தி என்பதனை தீர்த்து வைப்பதில் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையின் புலனாய்வு ஊடகவியலாளர் தலையீடு செய்தபடியால் அந்தப் பத்திரிகையில் அது பரபரப்பான ஒரு செய்தியாகியிருந்தது. ஆயுள்காப்புறுதி என்ற விடயத்தினுள் ஒரு பாடத்தினை புகட்டும் கதை அது.

-> திரு & திருமதி சிட்னி பெல்ட்மன் (Mr. & Mrs. Sydney Feldman) என்னும் தம்பதிகள் 1979 ஆம் ஆண்டு வீட்டு அடமானக் கடன் (Mortgage Loan) ஒன்றினை 'கனடா ரஸ்ற்' (Canada Trust) என்னும் வங்கியில் பெற்று இருந்தார்கள்.

-> 1999ஆம் ஆண்டு மீண்டும் அதனை மீள மாற்றியமைத்து (Refinance) மேலதிகமாக கடனை பெற்று இருந்தனர். அப்போது வங்கி கடன் வழங்கும் அதிகாரி இவர்களின் அடமானக்கடனை பாதுகாப்ப தற்கு ஆயுள் காப்புறுதி (Mortgage life Insurance) மற்றும் கொடிய நோய்களுக் கான காப்புறுதி (Mortgage Critical Illness Insurance) ஆகியவற்றினையும் செய்து வையுங்கள் என அறிவுரை வழங்கி அதற்குரிய விண்ணப்பபடிவங்களையும் தயார்படுத்தினார்.

-> ஆனால் அவர் 1990ஆம் ஆண்டிலிருந்து நீரிழிவு நோய்க்கு மருந்து எடுப்பது, 1989 இல் இருதய சத்திரசிகிச்சை செய்தது, 1995 இல் முதுகில் சத்திரசிகிச்சை செய்த விடயங்கள் யாவற்றினையும் குறிப்பிட்டிருந்தார்.

-> கொடிய நோய்களுக்கான காப்புறுதிக்கு அவரின் இந்த நிலையில் விண்ணப்பிக்க முடியாது. ஆனால் ஆயுள் காப்புறுதிக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம் என வங்கி அதிகாரியினால் அறிவுரை வழங்கப்பட்டு அதேமாதிரியே செய்து முடிக்கப்பட்டது.

-> 2002இல் அடமானக் கடனை மீள புதுப்பித்து (Refinance) அதனை மேலும் அதிகரித்திருந்தனர். காப்புறுதி தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டபோது மாற்றம் எதுவுமில்லை என தெரிவித்திருந்தனர்.

-> ஏப்ரல் 17, 2009இல் ஸ்கொட்லாந்தினை பூர்வீகமாக கொண்ட அவர், தனது 66 வயதில் மரணமாகி அவரது மனைவி தமது அடமானக் கடன்களை வங்கிக்கு கொடுத்து தீர்ப்பதற்காக காப்புறுதி கம்பனி யினை அணுகியபோது மருத்துவ புலனாய்வுகள் யாவும் பின்னோக்கி ஆராயப்பட்டன.

-> 1999இலும் 2002இலும் வங்கி அதிகாரி நிரப்பிய அடமான கடனுக்குரிய விண்ணப் பத்தில் உடல் ரீதியான பாதிப்புக்களின் உண்மைகள் மறைக்கப்பட்டன என்ற காரணத்திற்காக காப்புறுதி தொகை நிராகரிக்கப்பட்டது.

ஆனால் இறுதியில் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் தலையீட்டினால், காப்புறுதி கம்பனி நட்டஈடு தொகையினை வழங்க மறுத்த போதிலும் கனடா ரஸ்ற் வங்கி அவர்களின் அடமானக் கடன் $170,000 அதனுடன் சேர்த்துக் கட்ட தவறிய அடமானக் கடன் $4,500 டொலர் தொகை யினையும் நீண்டகால போராட்டத்தின் பின்பு பொறுப்பெடுத்து அவர்களை கடனிலிருந்து விடுவித்திருந்தது என செய்தி வெளியிட்டிருந்தது.

"ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையின் நிதியியல் துறை எழுத்தாளர் எலன் றோஸ்மன் (Ms. Ellen Roseman, Personal Finacne Colummist) ஒரேயொரு வாசகத்தினை தமது கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு ஆங்கிலத்தில் தெரிவித்திருந்தார்.

"So, be very clear about your health problems, and If necessary ask for the policy to be medically underwritten at the time you apply for it." அதாவது ஆயுள் காப்புறுதிகளுக்கு மனு செய்யும் போது, தங்களின் மருத்துவ, உடலியல் நோய்கள் தொடர்பான கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என குறிப்பிடப்பட்ட விடைகள் யாவும் புலனாய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டதா என்பதனை தாங்களும் பூரணமாக அறிந்து கொள்ளுங்கள் என குறிப்பிடுகின்றார்.

ஏனெனில் தங்கள் ஆயுள் காப்புறுதியில் உடலியல் தொடர்பான மருத்துவ பிரகடனங்களை மறைக்கப்போய் காப்புறுதி தொகையினை தவறவிட்டவர்கள் கனடா வில் எமது சமூகத்தில் பலரை எங்கள் தொழில் அனுபங்களிலும் எதிர் கொண்டுள்ளோம்.

இங்கு ஆயுள் காப்புறுதி என்பதனை இரு வகைக்குள் உள்ளடக்குகின்றோம்.

1. மருத்துவ புலனாய்வுகளுடன் வழங்கும் ஆயுள் காப்புறுதி.

அதாவது விண்ணப்பத்தில் மருத்துவ உடலியல் ரீதியாக கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் உண்மையான விடை வழங்கப்பட்டதா? என்பதனை காப்புறுதி புலனாய்வாளர்கள் (Insurance Underwriters) உறுதிப்படுத்துகின்றனர்.


சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள், வைத்தியசாலைகளிலிருந்து ஆயுள் காப்புறுதிக்கு மனு செய்தவரின் சகல மருத்துவ அறிக்கைகளையும் (Authorized Physician Statement) பெற்று பரிசீலனை செய்கின்றனர். நேரடியாக ஒரு மருத்துவ தாதியினை அனுப்பி குருதி, சிறுநீரக பரிசோதனைகள், மேலும் தேவைப்படின் இருதய துடிப்பு பரிசோதனை யாவும் முடித்து அந்த அறிக்கைகளின் பரிசீலனை யின் பின்பு காப்புறுதி ஒப்பந்தத்தினை வழங்குகின்றனர். இத்தகைய நிலையில் வழங்கப்பட்ட ஆயுள்காப்புறுதி ஒப்பந்தங் களின் நட்டஈடு கோரலின் போது பிரச்சினைகள் எவையும் வர சந்தர்ப்பம் இருக்காது.

2. மருத்துவ புலனாய்வுகள் இல்லாத ஆயுள் காப்புறுதி (Non Medical Life Insuracne)

நம்பிக்கையின் அடிப்படையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வழங்கப்பட்ட பதில்களை மட்டுமே ஆதாரமாக வைத்து வழங்கப் படும் ஆயுள்காப்புறுதி. கேள்விகளை புரிந்து கொள்ளாது ஏதாவது வழியில் உண்மைகளை மறைத்தால் ஆபத்தாகவே போய்விடும்.

மேலே 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வெளிவந்த செய்திக் கட்டுரையில், அனுபவத்தினை புகட்டும் தம்பதிகளின் கதை என்ற விடயத்திலும் இதேமாதிரியான காப்புறுதியினையே அவர்கள் பெற்று இருந்தனர். இத்தகைய வழியில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்தவர்களுக்கு அங்கு கட்டுரையாளர் வழங்கும் ஒரு அறிவுரை!

'காப்புறுதி ஒப்பந்த பத்திரம் கையில் வந்த பின்பு மருத்துவ, உடலியல் ரீதியான கேள்விகளுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியாக வழங்கப்பட்டதா? என்பதனை தங்கள் குடும்ப வைத்தியர் மூலம் ஒருமுறை உறுதி செய்து கொள்ளுங்கள்' என்பதேயாகும். அவ்வாறு செய்தால் உயிரிழப்பின் பின்பு நட்டஈடு கோரலில் எந்தவிதமான பிரச்சினைகளும் வராது பார்த்துக் கொள்ளலாம்.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் முகாமையாளர்கள் தேவை

UWINPRO TRAINING & CONSULTING / CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES

ஆற்றல் மிக்க எமது குழுவுடன் சேர்ந்து நீங்களும் முன்னேறுங்கள்!

**At Canadian College for Higher Studies** our educational philosophy is to work harder to put our students' interests at the forefront of everything we do. We provide dedicated and professional instruction to help our students achieve their educational goals. Our programs are focused on qualifying our graduates for six figure careers. In fact, our student have earned more than $ 200,000 per year within a couple of years from the start date. Most of our well performing students were beginners.

Our faculty brings up to three decades of knowledge & experience to the classroom with the promise of staying committed to student's success through excellence in teaching and learning.

At **UWIN** Pro we focus in providing corporate consulting and training services. We have provided such services to Federal Government of Canada - CBSA, National Defense, PWGSC, HP USA, Patheon, Enbridge, SAP, Dr. Oetker etc. Some of our best students from Canadian College for Higher Studies have taken part in some of these projects.

**Canadian College for Higher Studies & UWIN Pro Inc.** are currently hiring Salespersons to help strategically promote our programs and courses to targeted clientele including local communities.

**The ideal candidates should**,

- identify training opportunities and conduct research on upcoming trends in the training local, international & corporate markets.
- promote corporate training offered by UWIN Pro Inc. to corporations if required.
- sell programs to communities by establishing contact and developing relationships with prospects.
- be friendly with community members and leaders by providing support, information, and guidance.
- Identify training improvements or new programs & courses by remaining current on industry trends, market activities, and competitors.
- prepare reports by collecting, analyzing, and summarizing information.
- feel that the customers are the top priority. So will assist in maintaining quality service by establishing and enforcing organizational standards.

**Skills/Qualifications:**

Presentation Skills, Client Relationships, Emphasizing Excellence, Energy Level, Negotiation, Prospecting Skills, Meeting Sales Goals, Creativity, Sales Planning, Independence, Motivation for Sales, Excellent Communication Skills. Applicants should have a minimum of 2 years experience in Marketing and Sales in education in Canada.

**A basic salary with generous bonus or profit sharing will be provided to suitable full time candidates.**
**Medical/dental benefits available after probation.**

**We also welcome applicants willing to work part time.**

மேல் குறிப்பிட்ட திறமைகளும் தகைமைகளும் உங்களுக்கு இருந்தால் உங்களைப் பற்றிய விபரங்களை எங்கள் மின்னஞ்சல் **info@thecanadiancollege.ca** இற்கு அனுப்பிவையுங்கள்

**www.thecanadiancollege.com**

# மனம், உடல், உயிர்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Mind, Body, Sole

மனித உடலின் தன்மை, பிரபஞ்ச சக்தி இயங்கும் விதம், மனநிலை, உடல் அமைப்பு, உயிர் மூச்சு ஒடுங்கும் இடம், அதில் உயிர்நிலை ஓட்டம் எவ்வாறு செயல்படுகின்றது? அவற்றை சீராகவும் சிறப்பாக இயங்க பண்டைய சித்தர்கள் சரசுவாசம் என்னும் மூச்சுப்பயிற்சி எவ்வாறு பேருதவியாகின்றது என்பதை இங்கு பார்ப்போம்.



பொதுவாக மனிதன் அமைதியையும் ஆரோக்கியத்தையும் பெற பலவிதமான வழிமுறைகளை சித்தர்கள் சொல்லியுள்ளனர். ஆரோக்கியமுள்ள மனிதன் தான் பிரபஞ்ச சக்தியை அடையமுடியும். அதனால் ஆரோக்கியத்தையே அவர்கள் முதன்மைப்படுத்தினர். இந்த நீண்ட ஆரோக்கியத்தைப் பெற சுவாசப் பயிற்சிதான் சிறந்தது என்று சொல்லிச் சென்றுள்ளனர்.

சரசுவாசம் என்பது காற்றிலுள்ள பிராணவாயுவை உள்ளிழுத்து மூலத்திலிருந்து சிரசிற்கு ஏற்றி இறக்குவதேயாகும். இவ்வாறு மூலாதாரத்திலிருந்து ஏற்றி இறக்கும்போது மூலாதார சக்தியானது மேலெழுந்து உச்சியை அடைந்து நெற்றி புருவ மத்தியில் ஒளிவட்டம் பிறக்கச் செய்யும். இதன் மூலமே பிரபஞ்ச சக்தியை அடைய முடியும். இதை ஞானக்கண் என்றும் அழைப்பர். மனதை அடக்கி ஆள்பவனே உலகை வெல்ல முடியும். மனதை அடக்க சரசுவாசமே சிறந்த முறையாகும். இதைத்தான் சித்தர்கள் 'மனம் ஒரு குரங்குபோல் அலைபாயும். அதை ஒருநிலைப்படுத்துபவனே ஞானியாவான்' என்கின்றனர். சரசுவாசம் செய்தாலே மனம் ஒரு நிலைப்படும். சுவாசத்தில் உள்ள பிராணன் மூலம்தான் உடலையும் செம்மைப்படுத்த முடியும். இதனைத் தொடர்ந்து செய்துவரும்போது மனம், உடல், உயிர் இவை மூன்றும் ஒருங்கிணையும் பல அரிய சக்திகளைப் பெற்று பல அற்புதமான செயல்களைச் செய்ய வழி பிறக்கும்.

மனம், உடல், உயிர் இம் மூன்றும் நேர் கோட்டில் வரும்போது மனதில் சஞ்சலமிருக்காது. உடல் புத்துணர்ச்சியுடன் காணப்படும். நீண்ட ஆரோக்கியத்தைக் கொடுக்கும். இதனால் நோயின் பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

'ஊன் உடம்பே ஆலயம்' என்கிறார் திருமூலர் மனமும் உயிரும் நிலைத்திருக்க உடம்பே ஆதாரம். உடம்பை சிலர் பொய் என்கின்றனர். ஆனால் இந்த பிறவியின் பயனை அடைய நாம் எடுத்திருக்கும் அவதாரம் தான் இந்த உடம்பு. எனவே இந்த உடலையும் மனதையும் செம்மைப்படுத்தினால் இந்த பூவுலகில் நாம் நினைத்தை அடைய முடியும்.

இன்றைய கால கட்டத்தை சற்று உற்று நோக்கினால் மக்கள் மனதை அதன் ஓட்டத்தில் விட்டு விட்டு உடலை சீர்படுத்தாமல் நோய்களின் கூடாரமாக மாற்றிக் கொண்டு தூக்கமின்றி மருந்து மாத்திரைகளுடன் வாழ்க்கையை நடத்துகின்றனர். குறிப்பாக மனம் உடல் இவை இரண்டின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டால், இரத்த அழுத்தம், சர்க்கரைநோய், மூட்டுவலி, இருதய நோய் போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

மனது; எரிச்சல், கோபம், அழுத்தம், கிளர்ச்சி போன்றவற்றிக்கு ஆட்படும்போது உடல் சூடாகின்றது. இதனால் பித்தத்தின் சுரப்பு அதிகரிக்கின்றது. பித்தம் அதிகரித்து இரத்தத்தில் கலப்பதால் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் (சர்க்கரை) அளவு அதிகரிக்கின்றது. உடலுக்குத் தேவையான சர்க்கரை முறைப்படி எடுத்துச் செல்லப்படாது இரத்தத்தில் சேர்ந்துவிடுகிறது. பின்னாளில் இந்த மிகுதியாகவுள்ள சர்க்கரை நீரிழிவு நோயாக மாறி உடலுக்கு தொல்லை கொடுக்கின்றது. இதுபோல் இரத்தத்திலுள்ள நீர்ச்சத்து வற்றும் போது கொழுப்பு அதிகமாகி அவை இரத்த நாளங்களில் படிந்து இரத்த அழுத்தத்தை உண்டு பண்ணுகிறது.

ஆதலால் உடல் பாதிப்பிற்கு மனதின் சீர்கேடே பிரதானமாகிறது. மன அழுத்தம்தான் அஜீரணக் கோளாறினை உண்டு பண்ணுகிறது. மலச்சிக்கலை ஏற்படுத்துகிறது. எனவே மனதை செம்மைப்படுத்த சரசுவாசமே சிறந்த வழி முறையாகும்.

### மனதை அமைதிப்படுத்தும் சுவாசப்பயிற்சி

ஒரு விரிப்பில் நேராக அமரவும். வலது கையின் கட்டைவிரலால் வலது மூக்கினை மூடி இடது மூக்கு வழியாக மூச்சுக்காற்றை மெதுவாகவும் ஆழமாகவும் உள்ளிழுக்கவும். பின் வலது கையின் மோதிர விரலால் இடது மூக்கினை மூடியபடி வலது மூக்குத்துவாரம் வழியாக உள் இழுத்த காற்றினை மெதுவாக முழுமையாக வெளிவிட வேண்டும். பின் அதே வலது மூக்கின் வழியாக திரும்பவும் உள்ளிழுத்து இடது மூக்கின் வழியாக வெளிவிட வேண்டும். பின் அதே மூக்கின் வழியாக உள் ளிழுத்து வலது மூக்கால் வெளிவிடவேண்டும். இவ்வாறு பல தடவை தொடர்ந்து செய்து வரும்போது மூளையின் நரம்புத் தொகுதிகள் அனைத்தும் சுறுசுறுப்படைந்து புத்துணர்ச்சி பெறுகிறது. அதனூடாக மன இறுக்கம் குறைந்து அமைதி பெறுகிறது. இத்தகைய சுவாசப்பயிற்சி தான் உடலும் உள்ளமும் ஒன்றிணைந்து செயல்பட வழிசெய்கிறது. உயிர் சமநிலைத் தன்மை பெறுகிறது.



ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# வருக வருக வசந்தமே!



இலைகுழை களைந்து பனிமழையில் நனைந்த
 மரம் செடி கொடிகள் யாவும் தளைக்க
பலரது வெறுப்புடன் பனியது விடைபெற
 வருக வருக வசந்தமென வரவேற்பாம்

கனடாவின் நிலப்பரப்பில் கனிவளங்கள் பெருகிட
 பயிர் இனங்கள் பசுமையுடன் செழித்தோங்க
போர் மேகம் களைய கார்மேகம் மழைபொழிய
 வருகவருக வசந்தமென வரவேற்போம்

மண்ணில் புகுந்தும் மரப்பொந்துகளிலும் மறைந்து வாழ்ந்த
 மர அணில்கள் வெளிவந்து மரத்துக்குமரம் தாவிப்பாய
பரந்த வானில் பறவைகள் பட்டாம்பூச்சிகள்
 பறந்திட வருகவருக வசந்தமென வரவேற்போம்

சுவர்களுக்கிடையில் சிறைப்பட்டிருந்து வயோதிப நெஞ்சங்கள்
 வெளியே வந்து வசதியாய் வீதியோரம் நடை பயில
சிறிதளவேனும் சினந்திடா வண்ணம் சில்லென வீசும்
 தென்றலோடு வருக வருக வசந்தமென வரவேற்போம்

பாலை வனங்கள் போல் காய்ந்து போயிருந்த சோலைவனங்கள்
 மடல்விரித்து மலர்கள் எல்லாம் பூத்துக்குலுங்க அங்கே
காளையர்கள் கன்னியர்களின் காதல் பூத்திட
 வருகவருக வசந்தமென வரவேற்போம்

கவிநாதம் பரந்தாமன்






ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca




# இளம் தமிழ் ஊடகவியலாளர்களை உருவாக்கும் அரும்பணியில்

## "Talent Media Educational Network"

"கனடாவைப் பொறுத்த மட்டில் ஊடகத்துறை பிரபல்யமானதும், வருவாய் மிக்கதுமான தொழிலாகும். இளைஞர்களாகிய நீங்கள் ஊடகத்துறையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க விடயம். நீங்கள் நேரடியாகவும் ஊடகத்துறையில் ஈடுபடலாம், அல்லது உங்களது உயர் கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் கல்லூரியிலும் ஊடகத்துறை பற்றிய கல்வியை கற்கலாம். கனடாவில் 1752ம் ஆண்டிலிருந்து Halifax Gazette என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளி வந்தது. இன்று அதன் வாரப் பத்திரிகை 120 மில்லியன் பிரதிகள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே இளைஞர்களாகிய நீங்களும் ஊடகத்துறையில் ஈடுபட்டால் எதிர் காலத்தில் மில்லியனராக வரலாம். ஊடகத்துறைக்கு சிறந்த எதிர்காலம் உண்டு. அதுபற்றிய மேலதிக விபரங்களை நீங்கள் பல்கலைக்கழக கவுன்சிலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நீங்கள் ஊடகத்துறைக்கு வந்த பின்னர் சொல்ல வேண்டிய கருத்துக்களை துணிந்து சொல்ல வேண்டும்."

ரொறண்டோ மாநகரில் தற்போது நிலவி வரும் அனுபவம் வாய்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் பற்றாக் குறையினைப் போக்கும் வகையில் தமிழை எழுத வாசிக்கத் தெரிந்த இளம் மாணவ, மாணவிகளுக்கு ஊடகத்துறை பயிற்சியினை வழங்கும் நடவடிக்கையில் 'Talent Media Educational Network" அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் நாற்பது மாணவ, மாணவிகளுக்கான கருத்தரங்கு கடந்த 26ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோ பேச் மவுண்ட் வீதியிலுள்ள Delta Acadamy நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அதில்



பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் இவ்வாறு கூறினார்.

இவ்வைபவத்துக்கு தலைமை தாங்கிய மேற்படி அமைப்பின் முக்கியஸ்தரும், ஊடகத்துறையில் நீண்ட கால அனுபவமும், ஆற்றலும் கொண்டவருமான கலாசூரி சிவநேசச்செல்வன் உரையாற்றிய போது "ஊடகத்துறையானது மதிப்பும், மரியாதையும் உள்ள தொழிலாகும். அரசியல்வாதிகளினாலும், பொது மக்களினாலும் நன்கு மதிக்கப்படுபவர்கள் ஊடகவியலாளர்கள். தினம் தினம் புதுப்புது செய்திகளை எழுதும் போது ஊடகவியலாளர்களுக்கே ஆர்வமும், ஊக்கமும் ஏற்படும்" எனக் கூறினார்.

இத்திட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றியவருமான திரு. அன்ரன் அருமைநாயகம் உரையாற்றிய

தொடர்ச்சி 36ஆம் பக்கம்




CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE
25
CTCC
1991 - 2016
கனேடியத் தமிழர் வர்த்த
வெள்ளிவிழ
புரட்டாதி மாதம் 09
GOLD SPONSOR
Lebara
GOLD S
NAVA
www.na
உலக நாடுகளில் இருந்து தமிழ் தலைவர்களும், கல்விமான்கள
கனேடிய அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்கள் பிரதிநித
நிகழ்விற்கான அனு
Community Sponsor
HOME & AUTO INSURANCE
SUREN NAVARATNARAJAH
416-520-6916
Community Sponsor
Life100
INSURANCE & INVESTMENTS INC.
www.life100.ca
Community Sponsor
TET HD
www.iwatchtet.tv
Community Sponsor
Canada
Community Sponsor
SUJAN SHAN
416.282.2000
RE/MAX
Community Sponsor
Ravi Kanagasabey
647-629-4434
Arthur Fire Protection Inc.
www.arthurfire.com
(905) 494-1408 Toll-Free:1-(866) 315-1408
Community Sponsor
We Decorate, You Celebrate!
Community Sponsor
Community Sponsor
SANTHA
Community Sponsor
Senthooran Punithavel
416-396-0707
the co-operators
A Better Place For You
Community Sponsor
Active Green + Ross
Tire Expert Christy
416.321.3443
3505 KENNEDY
கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளன
" இளைய சாதனைத்



தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு
ாக் கொண்டாட்டம்
மற்றும் 10ம் திகதிகளில்
2016
PONSOR
LAW
CORPORATION
ava.law
GOLD SPONSOR
Kanish & Partners LLP
Chartered Accountants and Business Advisors
நம், வர்த்தகத் துறையில் சாதனை நிலை நாட்டிய தமிழர்களும்,
திகளும் கலந்துகொள்ளும் எமது பிரமாண்ட வெள்ளிவிழா
நுசரணையாளர்கள்
ity Sponsor
Trust
Community Sponsor
747 AUTOPARTS
www.747autoparts.com
Community Sponsor
Chef RAMANAA
www.cheframanaa.com
Community Sponsor
Chapel Ridge
ity Sponsor
hinol inc.
shinol.ca
Community Sponsor
Sathya Law
www.sathyalaw.com
Community Sponsor
DILANI GUNARAJAH
BARRISTER | SOLICITOR | NOTARY PUBLIC
Community Sponsor
altona custom homes
www.altonahomes.ca
அனுசரணையாளர்களாக உங்களையும் இணைந்துகொள்ள உடன் அழையுங்கள்
416)-561-5733
ரோசான் தவரட்ணம் (Roshan)
வெள்ளிவிழா நிகழ்வு இயக்குனர்
த்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்
தமிழர்களை நோக்கி ”

# USED CAR SALES

we have cars for your budget starting $700 to $ 70,000.

We are the only used car dealer providing warranty for 2 years or 40,000km.

Get a voucher to do full inspection on your car or redeem it towards next purchase or sale or service



we fix cars, tow cars and take junk or scarp cars

$ 10 off COUPON

# CAR DETAILING

The greatest Auto Detailing Service!
Only 109.00

Steam/not hot water
high pressure steam for
full interior,engine and outside
Guaranteed to make the old car new

HIGH PRESSURE STEAM DRIES IN 15 MIN
LAST MINUTE NO PROBLEM.
ONLY SEATS AND FLOOR DEEP SHAMPOO WASH FOR CAR 75.00 & 100.00 FOR VAN OR 8 SEATERS.
NOTE THIS IS NOT QUICK RINSE AND SHAMPOO, THIS IS VERY DEEP INSIDE YOUR MATS AND CARPETS TO HAVE A HYGIENIC & DUST FREE & ECO FRIENDLY WASH.







## What does the package include?

- Hand wash and Dry - Rims cleaned - Tired shined
- Doorjambs cleaned - Complete vacuum of interior and trunk
- Air vents blown Out - Light Shampoo of interior
- Leather treated and protected - Vinyl and Plastic deep cleaned
- Rubber floor mats cleaned - Wood grain dressed to shine
- Console and Dashboard cleaned
- Windows cleaned - Interior Salt Removal

# ANBU MALAR AUTO SERVICES HUB

435 Middlefield Road Unit 70 Scarborough

Contact : Madhavan - 416 836 6791 email: amhomeservices@hotmail.com

TBC Toronto Business College
கனடாவில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
BUSINESS ADMINISTRATION
26 Weeks
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks
FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks (Co-op available)
MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks
PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ [illegible] ஆண்டுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000 or more
visit www.secondcareerontario.com

PART TIME COURSES
*Windows,Word,Excel,Power Point, Access,QuickBooks,Sage50 Accounting & Accpac 2012*
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# மனதில் ஒரு கீறல்




மனதில் பெரிதாக ஒரு கீறல்
மனத்திரை விலகிய நிலையில்
மருண்டு போய் நின்ற கணத்தில்
மாற்றம் வந்து வலியை தந்து விட்டது

நேற்றைய சத்தமோ, நிசப்த நிலையில்
நேரும் என்று கொஞ்சமும் நினைத்தும் பார்க்காது
நேசத்தின் தோற்றம் வெறும் ஏமாற்றமாக
நேர கால மாற்றத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியானது

ஆசைகள் ஒவ்வொன்றும் ஆற்றோடு அடியுண்டு
ஆதரவு தேடிய வெளிச்சமும் அணைந்து இருட்டில்
ஆழமும் அறியாமல், போகும் திசையும் தெரியாமல்
ஆரவாரம் எல்லாமே அடங்கி ஒடுங்கிய நிலையில்

வேண்டும் காட்சிகளை மாற்ற வழி தெரியவில்லையே
வேஷம் போடும் மனித வாழ்க்கையா இது
வேற்று கிரகம் ஒன்றை தேடிச் சென்றாவது
வேண்டிய வாழ்க்கை வாழ வரம் வேண்டுமே



மீரா குகன்
ஜேர்மனி

# சித்திரைப் புத்தாண்டே

தை மகளின் தங்கையாய் சித்திரைத் தேவி
துர்முகி நாமம் கொண்டு சித்திரத் தேர் ஏறிவருகின்றாள்
இத்தரையில் சமாதானத்தென்றலாய் வீச
இனிய புத்தாண்டாய்பிறக்கின்றாள்



அதிகாலை நாம் எழுந்து மகிமைமிகு மருத்துனீர்
தலையில் தடவி நன்னீரில் மூழ்கிடுவோம்
குறைவின்றி நம் வாழ்வு செழிக்கவென்று
வீட்டில் ஒளி விளக் கேற்றி வைப்போம்

முடித்தேங்காய் மாவிலை கொண்டு நிறைகுடம்வைப்போம்
கருத்துடன் புத்தாடை அணி கலன்கள் பூண்டிடுவோம்
பெற்றோர், பெரியோர் பாதம் பணிந்து அவர்தம்
கையால் கைவிசேசம் பெற்று மகிழ்வோம்

நிறைவான வாழ்க்கைத்தரம் வேண்டிட ஆலயம் சென்று
இறைவனிடம் வரம் வேண்டித்தீபாராதனை செய்வோம்
பகமைதனை மறந்து பலரும் இணைந்து நின்று
**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree Protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss / Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design / Calculations, and Landscape Architect Plan.

**We also offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**M.பாஸ்கரசிங்கம்**, P.Eng.

**Periyathamby Kuruparan** M Sc (Eng) **Meghal Raval** M Sc (Eng)

(416) **332 1743** www.**buildingexpertscanada**.com

# கற்பனை கலந்த உண்மைக்கதை

# சூழலும் ஊழலும் - 2

## அலசல் அரங்கம் - 5

கிருஷாந்தன் கூறுகிறான்...

நான் கனடா வந்து ஒரு வாரமாகி விட்டது. நிலமைகள் இங்கு மோசமாக இருக்கு மென்று தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன். எனது சித்தி எவ்வளவோ பணஞ் செலவழித்து என்னை அனுப்பியிருப்பதை நினைத்து சமாளிப்போம் என்று முடிவெடுத்தேன். அன்று சனிக்கிழமை பின்னேரம் போல் வீட்டுச் சொந்தக்காரர் ரவி என்னோடு கதைத்து, என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கு அவர்கள் கட்டிடத்திலேயே கீழ் மாடியில் இருக்கும் தமிழ் முதியவரிடம் அழைத்துப் போனார். அவர் தாயகத்தில் ஆசிரியராக இருந்து இளைப்பாறியவர். மிகவும் அன்பாகப் பேசி திங்கட்கிழமை என்னை அண்மையில் இருக்கும் கல்லூரிக்கு அழைத்துப்போய் சேர்த்து விடுவதாகவும், காலை 9 மணிக்கு ஆயத்தமாகி இருக்கும் படியும் சொன்னார். அவரது மனைவி எங்களை நல்லாய் உபசரித்தார். வடை, தேத்தண்ணி எல்லாம் தந்தார். அவர்களைச் சந்திச்சது எனக்குச் சந்தோசமாக இருந்தது.

**- துறையூரான் -**

வீட்டுக்குத் திரும்பி வந்து அவர் தனது காரில் நான் அன்று போன சுப்பர் மாக்கற்றுக்கு கூட்டிக்கொண்டு போய் மூன்று சோடி கழிசான் சேட்டும் ஒரு ஸ்வெற்றரும் வாங்கித் தந்தார். எனக்கு நோட் புத்தகம் பேனை பென்சில் எல்லாம் தேவை என்று கேட்டேன். அவற்றையும் வாங்கித் தந்தார். வேறு சில உள் உடுப்புக்களும் கேட்டு வாங்கிக் கொண்டேன். பாடசாலைக்குப் போனால் எனக்குள்ள பிரச்சினைகள் குறையும் என எண்ணியிருந்தேன். உடுப்புகள் கனக்க, வேண்டிக் கொடுத்து விட்டதாக மாமி மருமகனைக் குறை கூறினா. ரவி அதைப் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. கையில் பேப்பரும் பேனாவும் இருந்ததால் வீட்டுக்கும் சித்திக்கும் கடிதம் எழுத வெளி விறாந்தையில் இருந்த மேசைக்குப் போனேன். உடனே மாமி சொன்னா காகிதம் பிறகு எழுது இப்ப நாங்கள் இரவுச் சாப்பாடு ஏதாவது செய்ய வேண்டுமென என்னை சமயலறைக்கு அழைத்தார். எனக்கு பெரும் ஆத்திரமாக இருந்தது. ஆனால் ஒன்றும் செய்ய முடியாமல் வருத்தப்பட்டுக் கொண்டே சென்றேன்.

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் எங்கும் போகவில்லை. மாமியும் நானும் மட்டும் வீட்டில் இருந்தோம். ரவி மனைவியையும் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு அவர்கள் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார். மாமி எனது குடும்ப விபரங்களையெல்லாம் கேட்க ஆரம்பித்தார். நான் சிலவற்றை மறைத்து விட்டு வெளியில், உலாத்தப் போவதாகக் கூறிக் கிளம்பினேன். தானும் வருவதாக அவவும் புறப்பட்டா. எனக்கு கோபந்தான் வந்தது. அவவை விட்டு விட்டுப் போகலா மென்றால் முடியாமல் இருந்தது. என்னைப் பிடித்த சனியன் இலேசில் விடாது என்பதை அப்போது தான் உணர்ந்தேன். வேறு வழியின்றி அவவோடு கீழே இறங்கி கட்டிடத்தின் பின்பக்கத்தில் வெளியில் இருந்த ஒரு வாங்கில் மாமியை இருத்தி விட்டு நான் நடக்க ஆரம்பித்தேன். வீட்டின் முன்பக்கத்தில் நான் முதல்நாள் சந்தித்த ஆசிரியர் நின்று கொண்டிருந்தார். அவர் என்னோடு கதைத்தார். நான் மாமி பின்னால் இருக்கிறதா என்று சொன்னேன். உடனே அவர் சொன்னார் நீர் கவனமாக இருக்க வேணும். மனிசிக்கு எங்களைப் பிடிக்காது. காலமை வாரும் கதைப்பம் என்றார். திங்கட் கிழமை காலை 8 மணிக்கு பள்ளிக்கூடம் போவதற்கு தயாராக நின்றேன். வழக்கம் போல் ஒரு துண்டு பாணும் தேத்தண்ணியும் தந்தா மாமி. வாங்கிக் குடித்துவிட்டு வெளிக்கிட்டேன். மாமி உடனே சொன்னா பள்ளிக்கூடம் 10 மணிக்குத் தான் தொடங்கும் நீ ஏன் இப்ப போறாய். அந்த மரக்கறிகளை வெட்டி, வெங்காயமும் உரித்து வைச்சுட்டுப் போ என்று சொல்லி எல்லாவற்றையும் சமயலறை மேசையிலை வைத்தா. நான் சொன்னேன் அந்த ஐயா என்னை 8.30 மணிக்கு வரச் சொன்னவர். நாங்கள் போய், 'போம்' எல்லாம் நிரப்ப வேணும். "வெள்ளென வா என்று" அதுதான் இப்ப நான் போகவேணும். அவவுக்குக் கோபம் வந்திட்டுது. நீ என்ன படிச்சுக் கிழிக்கவே போறாய். அது 9 மணிக்குப் பிறகும் போகலாம். வெட்டி வைச்சுட்டுப் போ என்றா. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதெல்லாம் என் தலைவிதி என்று நினைத்துக் கொண்டே எல்லாவற்றை யும் வேகமாக வெட்டி வைத்துவிட்டு, அவ குளிக்கப் போன போது 9 மணியளவில் மகளுக்குச் சொல்லிப் போட்டு வீட்டை விட்டு வெளியேறினேன். நேரே ஆசிரியர் வீட்டுக்குப் போனேன். அவர் 'தம்பி' சாப்பிட்டாயா? எப்படிப் போகுது உன் சீவியம் என்று கேட்டார். எனக்கு ஒரே அழுகையாக வந்தது. கண்கள் கலங்கி யதைக் கண்ட அவர், 'ஏன் அழுகிறாய், அதிலை இரு. உனக்குப் பிரச்சினை ஏதோ இருக்கென்று நான் நேற்றுப் பின்னேரமே உன் முகத்தைப் பார்த்தவுடன் யோசித்த னான்' என்றார். எனக்கு எதைச் சொல்கிறது. எதை விடுகிறது என்று யோசித்துக் கொண்டிருந் தேன். அவர் சொன்னார் 'உனக்கு விருப்பமெண்டால் சொல்லலாம், அல்லா விட்டால் விடலாம். ஆனால் எனக்குத் தெரியும் அந்த மனிசி ஒரு மாதிரி. உனக்கு ஒழுங்காகச் சாப்பாடு கூடத்தராது' என்றார். நான் நடந்த யாவற்றையும் சொன்னேன். மனம் ஆறுதலாக இருந்தது. இதற்கிடை யில் அவரது மனைவி புட்டும் வாழைப் பழமும் கொண்டு வந்து தந்தா. நான் வேண்டாமென்று சாப்பிட மறுத்தேன். ஆனால் மாஸ்டர் சொன்னார் 'நீ பள்ளிக் கூடத்துக்கும் போறாய் இனிப் பின்னேரம் 4 மணிக்குத்தான் வருவாய், சாப்பிடு என்றார். என்னிடம் காசிருக்கு அங்கை ஏதாவது வாங்கிச் சாப்பிடுவேன் என்றேன். அவர் 'பரவாயில்லைச் சாப்பிடு' என்று வற்புறுத்தினார். ஆகவே சாப்பிட்டு விட்டு அவை தந்த கோப்பியையும் குடித்தேன். கனடாவுக்கு வந்து நான் முதன் முதலில் கோப்பி குடித்தது அன்றுதான்.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



Math tutorial 319

Answers to tutorial 318

1)The number of integers divisible by 7 is n(A)=142 , divisible by 13=76 ,n(b) =76 ,divisible by 91=10 that is $n(A\cap B)$=10

N(AUB)=n(A) +n(B) –n(A∩B)

=142+76-10=208 ,so numbr of integers divisible by 7 or 13 is 298

2)The number of three-letter words possible is $26^3$.In this that do not containa,e,i,o,u,or y is $20^3$.Therefore the number of three letter words that contain at least one vowel is $26^3-20^3=9576$ .Similarly 4 letter words $=26^4-20^4=296976$ and 5 letter words is $26^5-20^5=8681376$.Total =8987928.

3)The Ph level is defined by Ph=-log[$H^+$] , For milk 6.5=-log[$H^+$]or log [$H^+$] =-6.5, [$H^+$]$=10^{-6.5}$

$=3.2X10^{-7}$

Tutorial 319 (Questions)

1 )(a) If $x^2yz^3=7^4$and $xy^2=7^5$ ,find the value of xyz? (for gr 10&11)

(b) Factorize $2x^{2n}-7x^n+3$

2)If $30/7 = x + \frac{1}{y+1/z}$ ,where x,y and z are positive integers ,then find the value of x+y+z? (for gr 11)

3)If f(x) =px+q and f[f{f(x)}] =8x+21 and if pand q are real numbers ,find p+q ?(gr 11&12)

4)The line $\bar{r}$ =( q,t ,-4 ) +s(-2 ,1 ,2) .,q,s ,t,∈ $R$, contains the point P(6 ,3 ,0 ).Determine the value of q&t? (gr 11&12)

5)An individual"s commuting time to work has mean(average) 73 minutes and standard deviation 12 min.How early should the person leave home to be sure of arriving at work on time at least 80 percent of the time?(for gr 12)

By Mr S.F.Xavier(Teacher)

Tel6473409490/4167322228

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

## அலையா? இம்மியா?

யுகிளிட் மற்றும் அறிஞர்களினது ஒளி பற்றிய கருத்துக்கள், ஒளி ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லும் தன்மையை அறிவதில் சிக்கலை அதிகப் படுத்தியது. அவர்கள் அறிந்து கொண்ட விடயங்களில் இருந்து ஒளி செல்கையில் அலை வடிவற் செல்வது போலவும் இருந்தது. சின்னச்சின்ன துண்டுகள் பல தொடர்ச்சியாகச் செல்வது போலவும் தெரிந்தது. இதனால், ஒளி செல்வது அலை வடிவிலா அல்லது துணிக்கைகளாகவா என்ற சர்ச்சை அந்நாட்களில் பெரியதாக வந்து விட்டது. ஆனால் அவர்களால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

கிட்டத்தட்ட யுகிளிட்டின் பின்னராக 2000 வருடங்களின் பின்னர், 17ஆம் நூற்றாண்டில் ஈர்ப்பு விதியை உலகெலாம் அறிமுகப் படுத்திய சேர் ஐசாக் நியூட்டன்தான் ஒளி யின் துகள் - அலைப் புதிருக்கு உறுதியான விளக்கம் ஒன்றைக் கொடுத்தார். இயற்கையின் இரகசியங்களை அறிய முற்பட்வர்களில் மிகவும் முக்கியமானவர் தான் நியூட்டன். நியூட்டனைப் பற்றி கொஞ்சம் அறிந்து கொண்டு மேலே போவோம். இயற்பியலின் பல பகுதிகளிலும் ஆய்வுகள் செய்த அவரது ஆய்வுகளில் ஆரம்பக் காலங்களில் முதலிடம் பிடித்துக் கொண்டது ஒளிதான். ஒளியியலில் ஏராளமான முடிவுகளைத் தந்திருந்தார். பௌதீகத்தைப் பாடமாகப் படித்தவர்கள் அறிவார்கள்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நியூட்டன் என்றதும் ஈர்ப்புத்தான் அனைவருக்கும் முதலில் ஞாபகத்திற்கு வரும், இல்லையா? ஆனால் ஈர்ப்பு, தற்செயலாக அவரது ஆய்வுப் பாதையில் வந்த ஒன்று. அந்தத் தற்செயல் என்பது அப்பிள் பழம் அவரது தலையில் விழுந்தது என்பதல்ல. அப்படி ஒரு நிகழ்ச்சி அவரது வாழ்க்கையில் நடந்ததாக அவர் கூறவும் இல்லை. பதிவுகள் எதுவும் கூட இல்லை. அக்கதை பிற்காலத்தில் ஈர்ப்புப்பற்றிக் கூறியவர்கள் வசதிக்காகக் கூறிய கதை என்கிறார்கள். உண்மையில் ஹேலி என்பவருக்கு வால்வெள்ளிகளின் இயக்கம் பற்றிய விளக்கத்திற்காக, கெப்பிளர் என்ற விஞ்ஞானி கூறிய கோள்களின் இயக்கங் களுக்கான விதிகளின் விளக்கங்களைச் சரி பார்க்கையிலேயே ஈர்ப்புப் பற்றிய ஞானம் நியூட்டனுக்கு வந்தது.

அதனை இப்போது விட்டுவிட்டு எங்களின் ஒளியிற்கு வருவோம். இயற்கையுடன் நன்றே ஒன்றித்து விளையாடிய நியூட்டன், கலிலியோ கலிலி அடியெடுத்துக் கொடுக்க, மற்றவர்களும் இயற்பியல் உலகினை அனுபவிக்கச் செய்தவர். தாறுமாறாகக் கிடந்த இயற்பியலை ஒழுங்குபடுத்திச் செம்மைப்படுத்தியவர். அவரின் பின்னால், அவரால் இனம் காட்டப்பட்ட, ஒழுங்கான இயற்பியலை செம்மை இயற்பியல் (Classical Physics) என்றார்கள். விசைகளையும், அவற்றினால் பொருட்களின் இயக்கங்களையும் தனது இயக்கவிதிகள் மூன்றினையும், ஈர்ப்புவிதியினையும் கொண்டு, அக்கால நிலையில் துல்லியமாக அறியக் கூடியதான, விளங்கக் கூடியதான செம்மைப் பொறிமுறையை தந்தவர். இவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுண் கணிதம், இவரது நிறுவல்களுக்கு பெருத்த உறுதிப்பாடுகளைக் கொடுத்தது. வெள் ளொளியில் ஏழு நிறங்கள் ஒளிந்திருப்பதை அம்பலப்படுத்தியதின் மூலம் நியூட்டன் அறிவியல் உலகிற்கு அளப்பரிய உதவிை-யச் செய்திருந்தார். வெள்ளொளியிற் காணப்படும் ஏழு நிறங்களினதும் பகுப்பினைத் திருசியம் அல்லது நிறமாலை என்கிறார்கள். இயற்கையின் இரகசியங் களை வெளிக்கொண்டு வருவதில் நிற மாலைகள் பெரும் பங்கேற்கின்றன. இன்றும் கூட, நிறமாலைகள் பல சிக்கல்களைத் தீர்க்க உதவியாக இருக்கின்றது.

ஒளியானது துகளா இல்லை அலையா என்ற கேள்விக்கு நியூட்டன் தந்த பதிலைப் பாருங்கள். அவரைப் பொறுத்தவரையில் ஒளியானது அலை வடிவிற் செல்வதாய் இருக்கவே முடியாது, சின்னச் சின்ன துகள்களாகவே ஒளி செல்ல வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார். ஒளிமுதல் ஒன்றிலிருந்து ஒளியானது சின்னச் சின்னத் துகள்களாக எல்லாத் திசைகளிலும் வீசப்படுகிறது. இத்துகள்கள் ஒரு ஊடகத்தின் ஊடாக நேரான பாதையிற் பயணப்படுகின்றன. ஒரு செக்கனுக்கு ஆயிரம் கோடிகளுக்கும் அதிகமான, சின்னச் சின்னத் துகள்கள் ஒவ்வொரு ஒளிமுதல்களாலும் எல்லாத் திசைகளிலும் வெளிவீசப்படுகின்றன என்றார், நியூட்டன். இத்துகள்கள்தான் ஒளிச் சக்தியைக் காவிச் செல்கின்றன என்றார். இச்சிறிய துகள்களை நியூட்டன் 'கொப்புலஸ்' (copulas) என அழைத்தார். விண்மீன்கள், கதிரவன் என்பவற்றில் இருந்தெல்லாம் கூட இவ்விதமே ஒளி புவியை வந்தடைகின்றது என்றார்.


நியூட்டனால் தனது ஒளித்துகள்கள் கொள்கையை முதலில் முற்றுப்படுத்த முடியவில்லை. அதற்கான ஒரு எடுகோள் விளக்கத்தையும் கொடுக்க வேண்டி வந்தது. சிக்கல் ஒளி சக்தியின் வடிவம் என்பதில் இருந்து வந்தது. பொதுவாகவே சக்தியானது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு ஊடகம் ஒன்று தேவை. அப்படியாயின் கதிரவனில் இருந்தோ அல்லது விண்மீன்களில் இருந்தோ, வெற்றிடமான அண்டவெளியை-தத் தாண்டி எப்படி ஒளித்துகள்கள் ஒளிச் சக்தியை கொண்டு வரமுடியும்? நியாயமான கேள்விதானே! நியூட்டன் அதற்குக் கொடுத்த தீர்வைப் பாருங்கள். ஆகாய வெளியை ஈதர் என்கிற கண்களுக்குப் புலப்படாத, ஊடகம் நிரப்பி இருக்கிறது என்றும், அவ்வூடகத்தின் ஊடாகவே ஒளி விண்மீன்களில் இருந்து புவிக்கு வருகின்றது எனவும் கூறினார். இந்த ஈதர்க் கருத்தினை வேறு சிலரும் முன்னரே கூறியிருந்தாலும், அதனை பெருமளவில் வெளியெடுத்துத் தந்ததில் நியூட்டனின் பங்கே பெரிதாக இருந்தது. மேலும் வெற்றிடத்தை நிரப்பியிருக்கிற இந்த ஈதரின் இயல்புகளையும் விளக்கியிருந்தார். நீயூட்டன் கண்ட ஈதர் மிக இலேசானது, முறிபட முடியாது மீள்தன்மை இயல்புடை யது, எதனையும் தடைசெய்யாது தன்னுள் இயங்க அனுமதிப்பது போன்றவை அவற்றுள் முக்கியமானவை.

இவை இப்படியிருக்க சக்தி செல்வதற்கு ஓர் ஊடகம் தேவை என்பதைப் போலவே இன்னொரு தேவையும் நியூட்டனுக்கு இருந்தது. அது ஒளியின் வேகம் பற்றியது. வேகங்களை பொதுவாகவே பார்க்கின்ற இடத்தினைப் பொறுத்து மாறுபடும், அதனால், ஒரு அவதான-யின் சார்பாகத் தான் பார்க்க வேண்டும், கூற வேண்டும் என்ற அறிவியல் விளக்கத்தினை கலிலியோ கலிலி கொண்டு வந்திருந்தார். அதிலிருந்து அம்முறையானது விஞ்ஞானி களினால் பின்பற்றப்பட்டு வந்தது.

பொதுவாகவே பேரண்டத்தின் ஒவ்வொரு பொருட்களும் தன்னைச் சுற்றித் தனக்கென ஒரு வெளியைக் கொண்டிருக்கின்றன. எனக்கு உங்களுக்கு, அருகில் கதிரைக்கு என்று எல்லாப் பொருட்களுக்குமே தனித்தனி விசேடமான வெளியாக எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது, அவ்வெளி. இதனை அப்பொருளின் அல்லது அந்த ஆளின் மாட்டேற்றுச் சட்டம் என்கிறார்கள், இயற்பியல்வாதிகள். சகல பொருட்களின தும் இயக்கங்களை, நடத்தைகளை அவ்வெளியிகளிலே, அதாவது அவற்றின் மாட்டேற்றுச் சட்டத்திலேயே அப்பொருட்கள் பார்க்கின்றன அல்லது பார்க்கப்படுகின்றன. எந்த இடத்தில் அல்லது எந்த பொருளில் இருந்து வேகம் கூறப்படுகின்றதோ, அப்பொருளினது மாட்டேற்றுச் சட்டத்தில் தான் அந்த வேகம் எனக் கூறுவார்கள். மாட்டேற்றுச் சட்டம் என்கிற அவ் அவதானி ஓய்வில் இருக்க வேண்டும். இதுபற்றிய மேலதிக விளக்கத்தினை பின்னர் பார்ப்போம். ஆகாயவெளியில் ஓடி வருகின்ற ஒளியின் வேகத்தைப் பொதுமைப்படுத்திக் கொடுப்பதற்கு ஓய்வில் உள்ள ஒரு அவதானி அதாவது மாட்டேற்றுச் சட்டம் ஒன்றும் நியூட்டனுக்குத் தேவைப்பட்டது. அந்த அவதானியாக, மாட்டேற்றுச் சட்டமாக ஈதரை நியூட்டன் பார்க்க வேண்டிய அவசியமும் ஒன்று இருந்தது. (ஓய்வில் உள்ள அவதானியை சடத்துவ மாட்டேற்றுச் சட்டமென விஞ்ஞானத் தனமாகக் கூறுவார்கள்) இயற்பியலின் முக்கிய தெளிவாக இருந்த மாட்டேற்றுச் சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொண்ட நாங்கள் அடுத்த தடவையில் ஒளியின் இரகசியங்களைத் தொடர்ந்து பார்ப்போம் சரிதானே!

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca








# EDUCATION

## Review Questions16-07

### ➢ CHEMISTRY IB Organic

**Predict whether an $E_1$ or $E_2$ mechanism proceeds when 2-chloro- 2-methyl butane undergoes β- elimination reaction.**

### ➢ BIOLOGY 12

**(i) Determine the number ATP molecules formed from the complete oxidation of a molecule of palmitic acid?**

**(ii) Explain the role of chaperons in protein synthesis.**

### ➢ CALCULUS & VECTORs 12

**A plane contains the following points**

**A(1, 2, 1), B(0, –1, 2), C(1, 0, 2) and D(2, –1, –6).**

(i) **Determine the Cartesian equation of the plane containing the points A, B and C**

(ii) **Find the point of intersection E, of the line *L* and the plane.**

(iii) **Find a unit vector that is perpendicular to the plane**

## Answer Key : 16-06

### PHYSICS 11/ 12

**Speeding car , $V_c$ = 30 m/s;**
**Police car Vi = 0 m/s², a =2m/s².**

**If the police car catch the car in '$t_p$' s and with the displacement of 'd' m.**

**For the car $\Delta d = v \Delta t_c$; $t_c = (t_p + 3)$;**
**$\Delta d = 30\ (t_p + 3)$**

**For the police car $\Delta d = v_i \Delta t + ½ a \Delta t^2$ ;**
**$\Delta d = 0 + ½ \times 2 \Delta t_p^2$ consider the distance travelled by the speeder and the police car are same.**

**$30\ (t_p + 3) = ½ \times 2 \Delta t_p^2$**
**Solve for $t_p$ using quadratic formula.**

### ➢ CHEMISTRY 12

$Mg + Cu^{2+} \rightarrow Mg^{2+} + Cu$

$Mg (s)/ Mg^{2+} (aq)\ //\ Mg^{2+} (aq) /\ Cu (s)$

$E°_{cell} = E°_{(cathode)} - E°_{(anode)}$

$E°_{cell} = E°_{(red. hal cell)} - E°_{(ox. half cell)}$

$E°_{cell} = E°_{(Cu^{2+}/Cu)} - E°_{(Mg^{2+}/Mg)}$

$E°_{cell} = (+0.34V) - (-2.356) = 2.7\ V$

**(b)** $[Ag^-][Cl^-] = 1x\ 10^{-10}$

When AgCl start precipitating the

$[Ag] = (1x\ 10^{-10}) / 0.1$

$[Ag^-] = (1x\ 10^{-9})$

$[I^-] = Ksp / (1x\ 10^{-9})$

$= (8.3\ x\ 10^{-17}) / (1x\ 10^{-9}) = 8.3x\ 10^{-8})$

Answer key
16-07 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

### ➢ CALCULUS 14 18

Differentiate (*i*) $\sqrt{1+x^2}\,.\,sin^3\sqrt{x}$

$$\frac{dy}{dx} = \sqrt{1+x^2}\,\frac{d}{dx}sin^3\sqrt{x} + sin^3\sqrt{x}.\frac{d}{dx}(\sqrt{1+x^2})$$

$$= \sqrt{1+x^2}\,3sin^2\sqrt{x}\,cos\sqrt{x}\,\frac{1}{2\sqrt{x}} + sin^3\sqrt{x}.\frac{1}{2\sqrt{1+x^2}}.2x$$

(iv) $5e^{2x^3}$

$u = 2x^3$ ; $therefore = 5\,\frac{d}{du}e^u.\frac{d}{dx}(2x^3)$


$= \frac{d}{du}e^u = e^u$ *and* $\frac{d\,2x^3}{du} = 6x^2$

$= 5e^u.6x^2$

$= 30\,e^{2x^3}.x^2$

### ➢ PHYSICS 11 & 12

➢




$F_k = \mu_k.F_N$ ; $F_N = F_g cos30°$ ; $F_s = F_g sin30°$

**5 kg object moving downwards**
**5g sin 30 – (0.15) 5gcos30° -T = 5a .........(1)**

**2 kg object moving upwards along the inclined surface**

**T- 2g sin 30 – (0.15) 2gcos30° = 2a ........(2)**

**a = 1.5 m/s² ; T= 10.5 N**

# இளம் தமிழ்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

போது "இங்குள்ள எமது இளம் சந்ததி யினருக்கு ஊடகக் கல்வியினை போதிப்பது பற்றி இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆராய்ந்தோம். பல குழுக்களாக இணைந்து முயற்சி செய்தோம். Delta அதிபர் திருமதி மகேந்திராவின் ஆதரவுடன் பயிற்சியினை வழங்க ஆரம்பித்தோம். இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இளைஞர்களாகிய நீங்கள் ஆர்வத்துடன் கற்று சிறந்த ஊடகவியலாளர்களாக வர வேண்டும் என்பதே எமது அவா" எனக் கூறினார்.




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உயரதிகாரியா-கப் பணியாற்றியவரும், TVI தொலைக்காட்சி நிறுவன இயக்குனரான திரு. விக்னேஸ்வரன் உரையாற்றிய போது "கனடாவிலே ஊடகங்களுக்கு பூரண சுதந்திரம் உண்டு. அதனால் அரசியல் கட்சிகளே தத்தமக்கென தனியான ரெலிவிசன் நிறுவனங்களை வைத்துக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றன. அத்துடன் Media Studies என்ற பாடமும் இருக்கின்றது. தத்தமது தேவைக்கேற்ப ஊடகத்துறையை எவ்வாறு பயன்படுத்தலாம் எனப் போதிப்பதே அப்பாடம். அதேபோன்று எமது மாணவர்களுக்கு தமிழ் ஊடகத்துறையில் பயிற்சி அளித்து வளர்த்து விடுவதே Talent Media Education அமைப்பின ரின் குறிக்கோளாகும். எனவே இளைஞர்களாகிய நீங்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறந்த ஊடகவிய லாளர்களாக வர வாழ்த்துகின்றேன்" எனக் கூறினார்.

எழுத்தாளரும், கொழும்பு வீரகேசரி பத்திரிகையில் பத்தாண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய வருமான திரு.மூர்த்தி செல்லத்துரை உரையாற்றியபோது "இன்று இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள இளைஞர்களும், யுவதிகளுமாகிய நீங்கள் அதிஷ்டசாலிகள் ஆவீர்கள். ஏனெனில் எமக்கெல்லாம் இத்தகைய வசதிகள் எதுவுமின்றி எமது எழுத்தாற்றல் திறமையினைக் கொண்டு தான் ஊடகத்துறைக்குச் சென்றோம். ஊடகவியலாளராகிய பின்னர் வேலை செய்து கொண்டே அனுபவத்தைப் பெற்றோம். ஊடகத்துறை ஆர்வமும், மதிப்பும் உடைய தொழிலாகும். ஊடகவிய லாளர்களாகிய நாம் எழுதும் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றினை தினமும் எத்தனை ஆயிரம் வாசகர்கள் வாசித்து மகிழ்கின்றனர். எனவே இளைஞர்களாகிய நீங்களும் ஆர்வத்துடன் ஊடகத்துறையில் ஈடுபட்ட பின்னர் அதன் சிறப்பினை அனுபவ ரீதியாக உணர்ந்து கொள்வீர்கள்" என்றார்.

மற்றும் கனடாவில் வாழ்ந்து வரும் தமிழ் சிறார்களுக்கு தமிழ் மொழியினைப் போதிப்பதில் ஈடுபட்டு வரும் திரு. இராசரட்ணம், திரு. அருள் சுப்பிரமணியம், மற்றும் செந்தாமரை பத்திரிகை ஆசிரியை திருமதி ராஜி அரசரட்ணம், Delta Acadamy அதிபர் திருமதி மகேந்திரா ஆகியோருட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.





# சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



**Are you interested in buying an investment property?**
இரண்டாவது வீடு(கொண்டோ) வாங்க விரும்புகின்றீர்களா?



You know, You can have one + one






How Much? Don't Ask.... **Call me**

Ragu Mahesu

416-450-6833 (24hrs)

RE/MAX


### கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின் பொதுக்கூட்டமும் செயலவை உறுப்பினர் தெரிவும் - 2016

காலம்: ஏப்பிரல் 03 ஞாயிற்றுக் கிழமை 2016. ( April 03rd, Sunday 2016)
நேரம்: பிற்பகல் 03.00 – 8.00 மணிவரை
இடம்: சிறி. சண்முகநாதேஸ்வரர் ஆலயம் 33, Melford Drive, Scarborough. ON (Finch & Tapscott, South of Finch on Tapscott )
மாதகல் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
சபா. அருள்சுப்பிரமணியம், செயலாளர்
கனடா மாதகல் நலன்புரி சங்கம், கனடா.

# ஒன்ராரியோ அடிப்படைச் சம்பளம் உயர்கிறது!

**மணித்தியாலத்திற்கு $11.40 உயர்கின்றது.**
இவ் ஆண்டு இலை உதிர்காலத்திலிருந்து ஒன்ராரியோவின் மிகக்குறைந்த சம்பளம் மணிக்கு $11.40 ஆகமணியாக அதிகரிக்கப்பட இருக்கின்றது. ஒக்ரோபர் 01, 2016 இலிருந்து இப்பொழுது $11.25 ஆக இருக்கும் மணித்தியால சம்பளம் $11.40 ஆக அதிகரிக்கப்படும். 2006 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 10 தடவை சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2003 இல் $6.83 ஆக உயர்த்தப்பட்டது. மது வழங்கு பவரின் அடிப்படைச்சம்பளம் $9.90 ஆகவும் 18 வயதிற்குட்பட்ட மாணவர்களின் சம்பளம் $10.70 ஆகவும் அதிகரிக்கப்படுகின்றது.


www.vlambaram.com
www.tamilvanakkam.com



# CUSTOM BUILD HOME

**Build Your Personalized Custom Build Home**
**Starting From $139 / sq ft**

**Quality ! Price !! Peace of Mind !!!**



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான ,
தரமான கட்டிட நிபுணர்கள்

**Industrial Buildings from $85 / sq ft**

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)


# 329 நகைச்சுவைத் தொடர் ராசம்மா ராச்சியம்

கலக்கலப்பு தீசன்



மனித வாழ்வில் பிறப்பு என்று சொல்லும் பொழுதே இறப்பு என்பதும் இணைக்கப்படுகிறது.

சிலர் வாழ்வதும் மறைவதும் யாருக்கும் தெரியாது. கடந்தவாரம் பல்லாயிரக் கணக்கான மக்களை கண்ணீரில் ஆழ்த்தி வாழ்வின் அமைதியைத் தேடிக்கொண்டவர் மறைந்த முன்னாள் நகரபிதா றொப் போட் அவர்கள்.




இவர் மக்கள் மனதில் எப்படி இடம்பிடித்தார் என்பது கடந்தவாரம் ஊடகங்கள், பொதுமக்கள் அவருக்களித்த முக்கியத்துவத்தை கொண்டு அறியலாம். அவர் உபாதையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே இறந்துவிட்டதாக சில சமூக வலைத்தளங்கள் செய்தி வெளியிட்டன. மனித வாழ்வில் நகைச்சுவை தேவை. தனிமனித வாழ்க்கையை நகைச்சுவையாக்கக் கூடாது.



றொப் போட்டின் இறுதி ஊர்வலம்.....எவ்வளவு மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார்... ரி.வி. யில் பார்த்துவிட்டு சற்று அமைதியாக அனேகர் இருந்தனர்.

வழமைபோல உலகர் குழாமின் உலக சஞ்சாரம் ஆரம்பமானது. ஐபொட் அகிலாண்டேஸ்வரி ஐபொட்டை உருட்டி உருட்டி கூகிள் மாப்பில் இடங்களைக் காட்டிக் கொண்டிருந்தா.



இதிலை எங்கடை வீடு....இதாலை நடந்து போனா சுதுமலை......அது மானிப்பாய் கிண்டு லேடீஸ் கொலிஜ்.....அது மானிப்பாய் மருதடி. சித்திரை வருசப் பிறப்புக்கு நடந்து போறனாங்கள் என்று சொல்லி முடிக்கமுன் செக்கண்ட்புளோர் செல்லம்மா ஐபொட்டில் உற்றுப்பார்த்தபடி உதிலை ஆவரங்கால் இருக்கோ? அகிலா எங்கடை வீடு எப்பிடி இருக்கெண்டு பார்க்கலாமோ?.....என்று கேட்க ஓமோம் இப்பவும் ஆமி இருக்கிற இடம். ராஜபக்சாவின்ரை ஆமி முந்தி வரேக்கை கொண்டுவந்த ராங்கர் வாசல்லை நிக்குதோ பார் என்று சிரித்துக்கொண்டு சொன்னா ஆட்டிலறி அன்னம்மா..




செக்கண்டபுளோர் செல்லம்மாவுக்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. தேர்தல் பிரசாரத்தில் ஜெயலலிதாவுக்கு விஜயகாந்தில் இருந்ததை விடக்கூட ஆத்திரம் வேறுவிதமாகத்திரும்பியது. செக்கண்டபுளோர் செல்லம்மா கேட்டா அதுசரி உலகண்ணை பாகிஸ்தானிலை பார்லிமெண்டுக்கு ஆட்டிலறி தாக்குதல், ஆப்கானிஸ்தானிலை குண்டுவெடிப்பு, ரஸ்சியாவிலை பிளேன் லாண்ட் பண்ணேக்கை அக்சிடென்ற், எகிப்திலை மனைவின்ரை கோபத்திலை பிளேனைக் கடத்தினவனாம் ஒருத்தன், இஞ்சை முந்தின போக்குவரத்து அமைச்சர் குடும்பத்துடன் சிறிய விமானப் பயண விபத்தில் இறந்திருக்கினம்.... வாறகிழமை அன்னம்மாக்கா ஜேர்மனிக்கு அவவின்ரை அம்மம்மாவுக்கு 90 ஆவது பேர்த்டேக்கு போறா...அதை நினைக்கத்தான் என... குரல் தளதளக்க சொல்ல...



செல்லம்மா போறதுதான். என்ன வந்தாலும் என்னைப் பொறுத்தது. இதோடை 4, 5 தரம் சொல்லிப் போட்டாய். நானே பயந்துபோய் இருக்கிறன். மலிவெண்டு சொல்லி...றிபண்ட் இல்லாத ரிக்கற்றை எடுத்துப் போட்டன் என்று தனது கஸ்டத்தை சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.

உலகண்ணை பாத்தீங்களே முந்தி காதலுக்காக சாஜகான் தாஜ்மகாலைக் கட்டினான். போனகிழமை முஸ்தபா தனது மனைவிக்காக எகிப்திய விமானத்தைக் கடத்தினான் என்று சொல்லி சிரித்தா... (துன்பம் வரும்போது சிரியுங்கள்)




ஞாபகம் இருக்கிறதா? ஏப்பிரல் 1...15

1. ஏப்பிரல் பூல். சித்திரை முட்டாள்கள் தினம்

1. ஈழத்து தமிழறிஞர் சி. கணேசையர் பிறந்த தினம். 1878....1958




2. 1975 சி.என். கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 553.33 மீற்றர்.

2. உலக சிறுவர் நூல் நாள்.

3. உலக பத்திரிகை சுதந்திர நாள்.

4. 1949இல் 12 நாடுகள் இணைந்து ஐக்கிய அமெரிக்கா தலைமையில் நேட்டோ அமைப்பை உருவாக்கின.



6.1896, 1ம் ஒலிம்பிக் தினம் ஆரம்பமான தினம்.

7. கமலினி செல்வராஜன் ஈழத்து நாடக, திரைப்பட நடிகை வானொலி அறிவிப்பாளர் நினைவுதினம். (1954.....2015)



7. உலக சுகாதார நாள்.

7. நாதஸ்வர மேதை காரைக்குறிச்சி அருணாசலம் நினைவு தினம்.

12. சர்வதேச வீதிச்சிறுவர்கள் நாள்.

12. மன்மத வருடம் நிறைவு



13. துர்முகி சித்திரை புத்தாண்டு துர்முகி

14. பி.பி. ஸ்ரீனிவாஸ் இந்திய பிரபல பின்னணிப்பாடகர் நினைவுதினம் (1930..2013)

14. மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்.

---

# கற்பனை...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

பள்ளிக்கூடத்தில் எனது வயதின்படி என்னை 9 ஆம் வகுப்பில் சேர்த்தார்கள். எனக்கு அன்று என்ன நடந்தது என்றோ, அவர்கள் பேசியது முழுவதுமோ ஒன்றுமே விளங்க வில்லை. மத்தியானச் சாப்பாட்டின்போது ஒரு பணிசும் கேக்கும் வாங்கிச் சாப்பிட்டேன். தமிழில் பேசுவதற்கு யாராவது கிடைப்பார்களா என்று ஆவலோடு இருந்தேன். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பையன் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அருகில் வந்து எனது பெயரை ஆங்கிலத்தில் கேட்டான். பின்னர் நீர் தமிழா என்றான். ஆம் என்று சொல்லி அவனின் பெயரை நான் கேட்டேன். அவன் முகுந்தன் என்றான். எனக்கு ஒரே சந்தோஷம். அவனோடு வாயாரக் கதைத்தேன். அவன் இங்கு 5 வயதில் வந்ததென்றும் எனக்கு அடுத்த வகுப்பில் A பிரிவில் படிப்பதாகவும் சொன்னான். எனக்கு அவனோடு அதே வகுப்பில் சேர்ந்து படிக்க ஆசையாய் இருந்தது. அவன் பள்ளிக்கூடம் முடிந்தபின் சந்திப்பதாக கூறிச் சென்றான். பின்னேரப் பாடங்கள் நடந்தன. முக்கால் வாசி ஒன்றுமே விளங்கவில்லை. ஆசிரியர்கள் கேட்ட கேள்விக்க஌ுக்கு ஒரு சொல்லில் பதில் சொன்னேன். அவர்களுக்கு எனது ஆங்கில அறிவின் நிலை நன்கு விளங்கிக் கொண்டது. அதன்பின் அவர்கள் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. பள்ளிக்கூடம் 3.30 மணிக்கு முடிந்தது. முகுந்தனை ஆவலோடு அவனது வகுப்புக்குப் பக்கத்தில் எதிர்பார்த்து நின்றேன். அவன் எனக்கு உதவி செய்வ தாகவும் தனது வகுப்பாசிரியரோடு பேசி என்னையும் தனது வகுப்புக்கு மாற்றித் தருவதாகவும் சொன்னான். எனக்கு ஒரே சந்தோம். கடவுளை வேண்டிக் கொண்டேன். சிறிது நேரம் கதைத்து விட்டு தான் வீட்டுக்குப் போவதற்கு கார் வருமெனக்கூறி விடைபெற்றுச் சென்றான். நான் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். காலையில் வாத்தியாரோடு வரும்போது அவர் திரும்பி வரும் வழியை நன்கு கவனித்து றோட்டுப் பெயர்களையும் எழுதி தந்து தனது வீட்டுத் தொலைபேசி நம்பரையும் தந்திருந்தார். ஆனால் வீட்டுக் காரருக்கு இதைப் பற்றிக் கூறக் கூடாதென் றும் சொன்னார். நான் எல்லாவற்றையும் எனது ஸ்கூல் பாக்கில் ஒளித்து வைத்தேன்.

வீட்டுக்குப் போனதும் மாமி கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டா. வாத்தியாரைப் பற்றியும் துருவித் துருவிக் கேட்டா. நான் ஒருவாறு பெரும்பாலான தகவல்களை மறைத்துச் சொல்லிச் சமாளித்தேன். குளித்து உடுப்புகள் மாற்றிக் கொண்டு வந்ததும் மாமி தேத்தண்ணி போட்டுக் குடிக்கும்படி கூறிவிட்டு ஹோலுக்குள் போய் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டி ருந்தா. நான் தேத்தண்ணி போட்டுக்குடித்து விட்டு அறையிலிருந்து பள்ளிக்கூடப் புத்தகங்களை எடுத்துப் பார்த்து வாசிக்க முயற்சித்தேன். எல்லாம் கஸ்டமாக இருந்தது. ஊரில் உருப்படியாக பள்ளிக்குப் போகாமல் படித்த ஆங்கிலமும் மறந்து போய் விட்டது. எல்லாம் நினைக்கத் தலைசுற்றியது. பிறகு 6 மணியளவில் மாமி வந்து சமையலறையில் உதவி செய்யக் கேட்டா. அரைகுறை மனதோடு போய் சிறு உதவிகள் செய்தேன். எல்லோரும் சாப்பிட்ட பின் எனக்குக் கொஞ்சம் பிட்டும் சம்பலும் தந்தா மாமி. பகலும் போதிய உணவில்லா ததால் எனக்கு நல்ல பசி. தந்த பிட்டு போதாது. மாமி சொன்னா அது போதும் இனிப்போய்க் கையை கழுவு என்று. அரைவயிற்றுச் சாப்பாட்டுடன் மிகுதிக்கு தண்ணீர் குடித்து விட்டு 9 மணிக்குப் பின் படுக்கலாமென்று பார்த்தால் மாமி விளக்கைப் போட்டுக் கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தா. வழக்கமாக 10 மணிக்குப் பின்தான் படுப்பா. அது எனக்குப் பெரிய தலைவலி ஆக இருந்தது. நேரத்துக்கு நான் நினைத்தபடி செய்ய முடியாத சூழ்நிலை. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நான் கஷ்டப்பட்டுக் கொண்டு அந்த வீட்டில் சீவித்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கூடப் பிரச்சினை ஒருபுறம். வீட்டில் பிரச்சினை மற்றொருபுறம். ஆனால் பள்ளிக்கூடத்துக்குப் போவது எனக்கு ஆறுதலாக இருந்தது. மேலும் முகுந்தன் எனக்குப் பல ஆலோசனைகள் கூறி எனது பிரச்சினைகள் சிலவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவினான். வீட்டுக்கும் சித்திக்கும் விபரமாகக் கடிதங்கள் எழுதிப் போட்டேன்.

வாத்தியாரும் முகுந்தனும் எனக்கு உற்ற உறவினர்கள் போல் என்னை நடத்தினர். முக்கியமாக வாத்தியார் சில புத்தி மதிகளைக் கூறி எனது வாழ்க்கையை வளமாக்கினார். ஒரு நாள் பாடசாலையால் வரும்போது வாத்தியார் வீட்டுக்குப் போய் அங்கிருந்து சித்தியோடு சுவிசுக்குத் தொலைபேசியில் கதைத்தேன். அவவுக்கு எல்லாம் ஒரே அதிர்ச்சியாக இருந்தது. அவ வாத்தியாரோடும் கதைத்து நல்ல வசதிகள் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டா.

(தொடரும்)






Free! Real Estate & Articling Classes*

20 வருடத்திற்கு மேல் ஆதன வியாபாரத்தில் அனுபவமுள்ளவரின் நேரடியான விரிவுரை வகுப்புகள்...

April 01, 2016 இல் புதிய பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது

சரியான சந்தர்ப்பம்

ஏறக்குறைய 100% Success Rate

For Reservation Please Call:

416 321 6969

*Some conditions apply.

HomeLife /GTA Realty Inc., Brokerage*

5215 Finch Ave. East, #203 Toronto, ON.

*Independently Owned & Operated

# அதிரடி காட்டிய கோஹ்லி இந்திய அணியை அரையிறுதிக்கு அழைத்து சென்றார்!

## விளையாட்டுத் தகவல்கள் 374




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 போட்டியில் அதிரடி காட்டிய கோஹ்லி இந்திய அணியை அரையிறுதிக்கு அழைத்து சென்றார். இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே மொகாலியில் நடந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 160 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் இந்தியா தடுமாற்றத்துடன் துடுப்பெடுத்தாடிய நிலையில், நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோஹ்லி கடைசி நேரத்தில் அதிரடியால் இந்திய அணிக்கு வெற்றி தேடித்தந்தார். அவர் 51 பந்துகளில் 82 ஓட்டங்கள் குவித்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று அணியின் வெற்றிக்கு உதவினார். இந்தப் போட்டியில் அதிரடி காட்டிய கோஹ்லி அதிவேகமாக 1500 ஓட்டங்களை கடந்த மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர் கிறிஸ் கெய்லின் சாதனையையும் முறியடித்தார். முன்னதாக கிறிஸ் கெய்ல் 45 இன்னிங்ஸ்களில் 1500 ஓட்டங்களை தொட்டு சாதனை படைத்திருந்தார். ஆனால் கோஹ்லி இதை 39 இன்னிங்ஸ்களில் முறியடித்து புதிய வரலாறு படைத்துள்ளார்.

மேலும், சர்வதேச டி20 போட்டிகளில் 1500 ஓட்டங்களை குவித்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். மும்பையில் நடைபெறும் உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் இந்தியாவும், மேற்கிந்தியத் தீவுகள் அணியும் மார்ச் 31ம் திகதி மோதவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்த இங்கிலாந்து - இதன் சூப்பர் 10 போட்டியின் குரூப் 1ல் இங்கிலாந்து இலங்கை அணிகள் டெல்லி பெரோஷ் கோட்லா மைதானத்தில் மோதின. நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தெரிவு செய்ததையடுத்து இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்கள் குவித்தது. ஜேசன் ராய் 42 ஓட்டங்களும், ஜோ ரூட் 25 ஓட்டங்களும், இயன் மார்கன் 22 ஓட்டங்களும் எடுத்தனர். ஆட்டமிழக்காமல் ஜோஸ் பட்டர் அரைசதம் கடந்து 66 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனையடுத்து 172 ஓட்டங்களுடன் களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பம் முதலே தடுமாறியது. முதல் 4 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழக்க அடுத்து களமிறங்கிய ஏஞ்சலா மேத்யூஸ் ஆட்டமிழக்காமல் அரைசதம் கடந்து 73 ஓட்டங்கள் குவித்தார். மற்றபடி அதிகபட்சமாக சமரா கபுகேதரா 30 ஓட்டங்களும், திஸ்ஸர பெரேரா 20 ஓட்டங்களும், தசுன் சனாகா 15 ஓட்டங்களும் எடுத்தனர். 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. கிறிஸ் ஜோர்டன் 4 விக்கெட்டும், டேவிட் வில்லி 2 விக்கெட்டும், பிளங்கட் 1 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் ஜோஸ் பட்லர் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

டி20 உலக கிண்ணம்: அரையிறுதியில் நுழைந்தது மேற்கிந்திய தீவுகள் - டி20 உலக கிண்ணம் போட்டியின் சூப்பர் 10 ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது. நாக்பூரின் விதர்பா மைதானத்தில் தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய லீக் ஆட்டம் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் பந்து வீச்சை தெரிவு செய்தது. இதையடுத்து தென்னா பிரிக்காவின் துவக்க வீரர்களாக ஆம்லா மற்றும் டி காக் களமிறங்கினர். மேற்கிந்திய தீவுகளின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தென்னாபிரிக்கா வீரர்கள் விரைவாக வெளியேறினர். ஆம்லா 1 ஓட்டத்திலும், டூபிளசிஸ் 9 ஓட்டங்களிலும் ரொஸ்சோ ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். பின்னர் அதிரடி ஆட்டக்காரர் டிவிலியர்ஸ் களமிறங்கினார். சிறிது நேரம் தாக்குபிடித்த அவர் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது தென்னாபிரிக்கா 4 விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்தாலும் டி காக் நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களை உயர்த்த முயன்றார். எனினும் அவருக்கு ஏற்ற துணை அமையாததால் 3 பவுண்டரி, 1 சிக்ஸர் உட்பட 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டி காக் ஆட்டமிழந்தார். இறுதியில் டேவிட் வெஸி மற்றும் கிறிஸ் மோரிஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டம் காரணமாக 20 ஓவர் முடிவில் தென்னாபிரிக்கா 122 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்திய தீவுகள் தரப்பில் ரசெல், கெய்ல் மற்றும் பிராவோ தலா இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.


பின்னர் 123 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது. துவக்க ஆட்டக்காரர்களாக ஜான்ஸன் சார்லஸ் மற்றும் கிறிஸ் கெய்ல் களம் புகுந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கெய்ல் 4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்ததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர். பின்னர் வந்த ஃபிளட்சேர் 1 சிக்சர் உட்பட 11 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதையடுத்து சார்லஸுடன் சாமுவேல்ஸ் கைக்கோர்த்தார். இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்நிலையில் 2 பவுண்டரி, 1 சிக்ஸர் உட்பட 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சார்லஸ் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த பிராவோ 8 ஓட்டங்களிலும், ரசெல் 4 ஓட்டங்களிலும் சாமி ஓட்டங்கள் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். இதனால் தென்னாபிரிக்காவின் பக்கம் வெற்றி வாய்ப்பு திரும்பியது. எனினும் சாமுவேல்ஸ் இறுதி வரை போராடினர். 19 வது ஓவரில் சாமுவேல்ஸ் 6 பவுண்டரி உட்பட 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். கடைசி 6 பந்துகளுக்கு 9 ஓட்டங்கள் எடுத்தால் மேற்கிந்திய தீவுகள் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. அப்போது, கடைசி ஓவரின் 2 வது பந்தில் கர்லோஸ் சிக்சர் அடித்து பதற்றத்தை தணித்தார். இறுதியில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது. இதன்மூலம் அந்த அணி அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

உலகக்கிண்ண டி20 லீக் தொடரில் போட்டியில் அனுபவ அணியான இந்தியாவை வங்கதேசம் கதிகலங்க செய்து விட்டது. டி20 உலக கிண்ணம் தொடரின் சூப்பர் 10 ஆட்டத்தில் வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் 1 ஓட்டம் வித்தியாசத்தில் இந்தியா த்ரில் வெற்றி பெற்றது. டி20 உலக கிண்ணம் தொடரில் பெங்களூருவில் நடைபெற்ற ஆட்டத்தில் வங்கதேசம் மற்றும் இந்தியா விளையாடியது. நாணய சுழற்சியில் வென்ற வங்கதேசம் பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதையடுத்து இந்தியாவின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மாவும், தவானும் களமிறங்கினர். இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை குறைவாக இருந்தது. இந்நிலையில் 1 பவுண்டரி மற்றும் 1 சிக்ஸர் உட்பட 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரோகித் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரிலேயே தவானும் ஆட்டமிழந்தார். அவர் 2 பவுண்டரி, 1 சிக்ஸர் உட்பட 23 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதனை அடுத்து களமிறங்கிய கோலியும், ரெய்னாவும் அணியை சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் ஈடுப்பட்டனர். இதனால் இந்திய அணி 11 ஓவர் முடிவில் 73 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இந்நிலையில் 24 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் கோலி ஆட்டமிழந்தார்.
பின்னர் வந்த பாண்டியா 2 பவுண்டரி மற்றும் 1சிக்ஸர் அடித்து வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினார். கடந்த போட்டிகளில் சொதப்பிய ரெய்னா இந்த ஆட்டத்தில் நிலைத்து நின்று ஆடினார். இந்நிலையில் 1 பவுண்டரி 2 சிக்ஸர்கள் உட்பட 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவரும் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் இந்தியாவின் ஓட்ட வேகம் குறைந்தது. இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்களை மட்டுமே இந்தியா குவித்தது. டோனி 13 ஓட்டங்களிலும் அஸ்வின் 5 ஓட்டங்களிலும் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்க தேசம் ஆடி வருகிறது. இதையடுத்து 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்க தேசம் துடுப்பெடுத்தாட தொடங்கியது. முகமது மித்துன் ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்த நிலையில் ஆட்டமிழந்தாலும், தமிம் இக்பால் மற்றும் சபீர் ரஹ்மான் இருவரும் சிறப்பாக ஆடினர். இதனால் வங்க தேசத்தின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. இந்நிலையில் 4 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தமிம் இக்பால் ஆட்டமிழந்தார் இதையடுத்து சாகிப் அல் ஹாசன் களமிறங்கினார். இருவரும் இந்திய வீரர்களின் பந்து வீச்சை திறமையான சமாளித்து ஆடினர். அணியின் எண்ணிக்கை 69ஆக இருந்த நிலையில் சபீர் ரஹ்மான் 3 பவுண்டரி மற்றும் 1 சிக்ஸர் உட்பட 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மொர்டாஷா 6 ஓட்டங்களிலும், சாகிப் 2 சிக்ஸர் உட்பட 22 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தனர். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 12 ஓவர்களில் 95 ஆக இருந்தது. வெற்றி வாய்ப்பு இரு அணிகளுக்கு சம அளவில் இருந்ததால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. முகமதுல்லா மற்றும் சவும்யா சர்கார் இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களை குவிக்க முயன்றனர். அவர்களை வெளியேற்ற இந்திய வீரர்கள் கடுமையாக முயற்சி செய்தனர். எனினும் ஐந்து ஓவர்களுக்கு பிறகே இதற்கு பலன் கிடைத்தது. 1 சிக்ஸர், 1 பவுண்டரி உட்பட 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சவும்யா சர்கார் ஆட்டமிழந்தார்.

6 பந்துகளுக்கு 11 ஓட்டங்கள் எடுத்தால் வங்கதேசம் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. கடைசி ஓவரை பாண்டியா வீசினார். அந்த ஓவரில் தொடர்ந்து 2 பவுண்டரி அடித்த ரஹிம் அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் முகமதுல்லாவும் ஆட்டமிழந்தார். எனவே 1 பந்துகளில் 2 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ஆட்டத்தில் உச்சக்கட்ட பரபரப்பு ஏற்பட்டது. ஆட்டத்தின் கடைசி பந்தை சிறப்பாக வீசிய பாண்டியா சுவகட்டாவை ஆட்டமிழக்க செய்தார். இதன் மூலம் இந்தியா த்ரில் வெற்றி பெற்றது.



எஸ். கணேஷ்


தரத்தில் சிறந்தவை...
இல்லத்தரசிகளின் முதல் தெரிவு...
நிரு பிராண்ட் தயாரிப்புகள்
Organic
Extra virgin
COCONUT OIL
- 100% Natural
- No Preservatives
- No Genetically Modified Organism
Perfect For:
- Frying
- Cooking
- Baking
COCONUT
Niru
Coconut Oil
100% NATURAL, NO PRESERVATIVES, NON-GMO
PERFECT FOR FRYING, COOKING & BAKING
தமிழ் மளிகைக் கடைகளில் கிடைக்கும்
416 750 1976
www.niru.com
email: info@niru.com
Niru
நிரு


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM
$75
USED TIRES FROM
$35
FREE
OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From…
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
BMW
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.

# NK Movers

We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

**QUESTIONS TO ASK**

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- **Are you an insured company?**
- **Is your staff trained?**
- **Do you offer free estimates?**
- **What payment option is available? Is a deposit required?**
- **Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?**
- **Are there additional charges for:**
  **Stairs?**
  **Travel time from your location to mine?**
  **Evenings and weekends?**

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

**WWW.NKMOVERS.CA**

**clientsupport@thenkmovers.com**

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**

"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Brideltowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

Direct:416-908-5656 MORTGAGES
For all your Mortgage needs !
- 1st,2nd,3rd
- Purchase
- Refinance
- Renewal
- Switches
- Equity Line of Credit

Off:416-878-7979 Fax: 416-613-5779
Toll Free: 1-877-687-1214
Our Office:
1585 Markham Road, Unit# 407A
Toronto, M1B2W1 ON Canada
www.mortgagealliance.com
Email:nsubramaniam@mortgagealliance.com
Facebook:Nesan Subra
NESAN
Mortgage Agent
Mortgage Alliance
Independently Owned & Operated
Corporate Office: 209-8130 Sheppard Ave. East Toronto M1B 3W3

Free Real Estate Class - Call: 416.321.6969

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

BUY / SELL PROPERTIES IN GTA

CLARINGTON
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$579,900

QUEENSVILLE & HWY 404
Asking Price: $2.1M
BUILDING + BUSINESS
2 HOMES

NIAGARA FALLS
Bedrooms : 4 + 3
Washroom : 3
Asking Price:$399,900

OSHAWA
Bedrooms : 3 + 2
Washroom : 3
Asking Price:$379,900

PETERBOROUGH
Asking Price:$899,999
BUILDING + BUSINESS

OSHAWA
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$479,900

A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055
RE/MAX Dynasty Realty Inc.
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

NEW SHADI நகைத் தொழிலகம்
Specialized In Jewellery Making & Custom Design Watch Repairing.
- நீங்கள் விரும்பும் 22 கரட் தங்க, வைர நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
- உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் உங்களது நகைத்திருத்த வேலைகள் அதிநவீன லேசர் தொழில் நுட்பத்தில் செய்து தரப்படும்.
- கைக்கடிகாரங்கள் திருத்திக்கொடுப்பதோடு பற்றரியும் மாற்றிக் கொடுக்கப்படும்.

416 335 1040 / 647 409 4092 585 Middlefield Road, Scarborough, ON. M1V 4Y5.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

Ideal Escape Vacation Inc.
Call Mathu
GTA Square
5215 Finch Ave. E Unit 160
Toronto, ON. M1S 0C3
Ideal Escape
Air Ticketing/Cruise Packaging/Caribbean Vacation Packages/Visa Arrangements/Bus Tour (USA/Canada)
Tel: 416-841-1833
idealescape@gmail.com www.idealescape.ca